ஜெபதூபம்

(வாழ்வை மாற்றும் ஜெபக்குறிப்புகள் அடங்கிய கையேடு)

அச்சடிக்கப்பட்ட புத்தகம் ரூபாய் 25/- மட்டுமே

பிரதிகள் தேவைப்படுவோர் தொடர்புகொள்ளவும்: **9677087090**

ஜான்சன் நீதிமாணிக்கம்

ஜெபதூபம்

(வாழ்வை மாற்றும் ஜெபக்குறிப்புகள் அடங்கிய கையேடு)

ஜான்சன் நீதிமாணிக்கம்

வெளியிடுவோர்:

நிறைவாழ்வு மையம் அசெம்பிளி ஆப் காட்

எண் 1, முதலாவது குறுக்குத் தெரு

முருகன் நகர், திருவேற்காடு

சென்னை, இந்தியா – 600077

செல்: 9941931414 / 9841677587

ஜெபதூபம்

Prayer Incense

By **Johnson Neethimanickam**

பதிப்புரிமை: **ஜான்சன் நீதிமாணிக்கம்**
அனைத்துரிமையும் ஆசிரியருக்கே

முதல் பதிப்பு: பிப்ரவரி 2021 (1000 பிரதிகள்)
இரண்டாம் பதிப்பு: பிப்ரவரி 2021 (1000 பிரதிகள்

நன்கொடை: ரூபாய் 40/- மட்டும்

புத்தகம் தேவைப்படுவோர் தொடர்புகொள்க:
நிறைவாழ்வு மையம் அசெம்பிளி ஆப் காட்
எண் 1, முதலாவது குறுக்குத் தெரு
முருகன் நகர், திருவேற்காடு
சென்னை, இந்தியா - 600077
செல்: 9941931414 / 9841677587

Type Setting and
Cover design: **Johnson Neethimanickam**

அச்சிட்டோர்: **Pixor Graphics**
Triplicane, Chennai - 600005
Cell: 9841344268

© All Rights Reserved
No part of this publication may be reproduced or transmitted in any form or by any means, electronic, or mechanical including photocopying, recording or any information storage and retrival system, without permission in writting from the publisher

பொருளடக்கம்

1. ஜெபமுறைமைகள் 4

2. தனிப்பட்ட தேவைகளுக்கான ஜெபக்குறிப்புகள் 20

3. உங்கள் குடும்பத்துக்கான ஜெபக்குறிப்புகள் 31

4. உங்கள் சபைக்கான ஜெபக்குறிப்புகள் 42

5. நம் இந்திய தேசத்துக்கான ஜெபக்குறிப்புகள் 53

ஜெபமுறைமைகள்

ஜெபிக்க ஆயத்தமாகுங்கள்

ஒரு நாள் காலை சீஷர்கள் கண்விழித்துப் பார்த்தபோது, தங்களோடு உறங்கிக் கொண்டிருந்த, ஆண்டவர் இயேசுவைக் காணவில்லை. சீஷர்கள் அவரைத் தேடிச் சென்றபோது, வனாந்திரமான ஒரு இடத்தில் அவர் பிதாவோடு பேசி, உறவாடி, ஜெபித்துக் கொண்டிருப்பதைக் கண்டனர். அப்பொழுதுதான், பிசாசுகளைத் துரத்தவும், வியாதியஸ்தர்களைக் குணமாக்கவும், அற்புதங்களைச் செய்யவும் அவர் எங்கிருந்து வல்லமையை பெற்றுக்கொள்கிறார் என்பதை சீஷர்கள் புரிந்து கொண்டனர்.

அப்படியே, நம் வாழ்வில் சமாதானம், சந்தோஷம், ஆசீர்வாதம், வெற்றி, நித்தியவாழ்வை நாம் பெற்றுக்கொள்ள தேவனோடு பேசி, பழகி, உறவாடி, ஜெபிப்பது அவசியமாகும்.

இயேசு உணவைவிட (மத். 4:2), உறக்கத்தைவிட (லூக். 6:12), ஊழியத்தைவிட (லூக். 5:15-16) ஜெபத்தை முக்கியமாக நினைத்தார். அவர் ஜெபிப்பதற்கென ஒரு நேரத்தை ஒதுக்கினார் (மாற்.1:35; மத். 14:23; லூக். 5:16). மேலும் முக்கியமான தீர்மானங்களை எடுப்பதற்கு முன்பாக ஜெபித்தார் (லூக். 6:12-15). இப்போதும் நமக்காக தேவனின் வலதுபாரிசத்தில் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார் (எபிரேயர் 7:25; ரோமர் 8:34).

எனவே நாமும் ஆண்டவர் இயேசுவின் மாதிரியைப் பின்பற்றி ஜெபிக்கவேண்டும். இதற்காக சில ஆயத்தங்களை நாம் செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. அவைகளைக் குறித்து இனி நாம் காண்போம்.

1. ஜெபிக்க ஒரு இடத்தை ஆயத்தப்படுத்துங்கள் :

இயேசு ஜெபிக்க ஒரு இடத்தை ஆயத்தப்படுத்தி வைத்திருந்தார். பின்பு அவர் புறப்பட்டு, வழக்கத்தின்படியே ஒலிவமலைக்குப் போனார்; அவருடைய சீஷரும் அவரோடேகூடப் போனார்கள். (லூக் 22:39) என்று வேதம் சொல்கிறது.

உங்கள் வீட்டில் ஜெபிப்பதற்கென்று ஒரு இடத்தை ஆயத்தப்படுத்துங்கள். ஒருவேளை ஒரே அறையுள்ள சிறிய வீடாக இருந்தால் நான்கு மூலைகளில் ஒரு மூலையை ஜெபத்திற்காக ஒதுக்கி, அங்கே வசன ஸ்டிக்கர்களை ஒட்டுங்கள். உங்கள் வேதத்தையும், சபையின் பாட்டுப் புத்தகத்தையும், ஒரு நோட்டு புத்தகத்தையும், பேனாவையும் ஆயத்தப்படுத்தி வையுங்கள். (இப்போழுதே இந்த புத்தகத்தை கீழே வைத்துவிட்டு, ஜெபிக்க ஒரு இடத்தை ஆயத்தப்படுத்தியபின் தொடர்ந்து வாசியுங்கள்)

2. ஜெபிக்க ஒரு நேரத்தை ஒதுக்குங்கள் :

இயேசு ஜெபிப்பதற்கென்று அதிகாலை நேரத்தை ஒதுக்கியிருந்தார். அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப் போய், அங்கே ஜெபம்பண்ணினார் (மாற் 1:35).

நேரம் கிடைக்கும்போது ஜெபிப்பேன் என்று சொல்வீர்களானால், நேரமே கிடைக்காதபடி பிசாசு அவசியமற்ற பல வேலைகளைக் கொண்டுவந்துவிடுவான். ஆகவே, தினமும் காலையில் எழுந்தவுடன் ஜெபத்தை முதல் வேலையாக வைத்து, ஜெபத்துக்கென்று குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குங்கள். கீழ்க்கண்ட கட்டத்தில் நீங்கள் ஜெபிக்கத் தீர்மானித்திருக்கும் நேரத்தைக் குறியுங்கள்.

இன்றுமுதல் தினமும் .... மணி முதல் .... மணிவரை ஜெபிக்கத் தீர்மானிக்கிறேன்.

3. ஜெபிக்க ஒரு முறைமையை பின்பற்றுங்கள் :

எப்படி ஜெபிக்க வேண்டும், என்ன ஜெபிக்க வேண்டும் என்று அறியாததாலும், அல்லது ஒரு முறைமையை பின்பற்றாததாலும் ஜெபநேரம் சிலருக்கு சலிப்பைத் தந்து விடுகிறது. எனவே ஜெபிக்காமலேயே பல நாட்கள் கழிந்துபோய்விடுகின்றன. எனவேதான் ஆண்டவர் இயேசு, நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக (மத் 6:9) என்று தன் சீஷர்களுக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுத்தார்.

இனி வரும் பக்கங்களில் ஏழு எளிய ஜெபமுறைமைகள் கொடுக்கப்பட்டுள்ளது. உங்கள் தேவைக்கேற்ற ஜெபமுறைமையை நீங்கள் பின்பற்றி தினமும் உற்சாகமாக ஜெபம்பண்ணுங்கள். தேவனிடமிருந்து வல்லமையான பதிலைப் பெற்றுக் கொள்ளுங்கள்!

ஜெபமுறைமை 1

புதிய விசுவாசிகளுக்கான ஜெபமுறைமை

சிறுபிள்ளைகளுக்கும் புதிய விசுவாசிகளுக்கும் ஏற்ற எளிய முறைமை
(10 முதல் 15 நிமிடங்கள்)

1. மனதை ஒருமுகப்படுத்துங்கள் (இரண்டு நிமிடங்கள்)

...பட்டணத்தைப் பிடிக்கிறவனைப்பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன் (நீதி 16:32) என்ற வசனத்தின்படி இந்தக் காலை வேளையில் என் சிந்தையை உமக்கு நேராக ஒருமுகப்படுத்துகிறேன் என்று சொல்லுங்கள்.

தேவனுடைய பெயர்களை சொல்லி வாய்விட்டு அவரைப் புகழ்ந்து துதியுங்கள். அவர் செய்த நன்மைகளுக்காக நன்றி சொல்லி ஸ்தோத்தரியுங்கள்.

2. இதயத்தைக் கழுவி சுத்திகரியுங்கள் (மூன்று நிமிடங்கள்)

நான் குற்றமில்லாமையிலே என் கைகளைக் கழுவி, உம்முடைய பீடத்தைச் சுற்றிவருகிறேன் (சங் 26:7) என்ற வசனத்தின்படி என் இருதயத்தைக் கழுவி, சுத்திகரிக்கிறேன் என்று அறிக்கையிடுங்கள்.

கடந்தகால தோல்விகள், தவறான தீர்மானங்களை இயேசுவின் நாமத்தினால் புதைக்கிறேன். இந்த புதிய நாளில், ஒரு புதிய மனிதனாக, புதிய வாழ்வைத் துவங்குகிறேன் என்று உங்களை அர்ப்பணியுங்கள்.

3. கர்த்தருக்குள் மறைந்துகொள்ளுங்கள் (இரண்டு நிமிடங்கள்)

உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வல்லவருடைய நிழலில் தங்குவான் (சங் 91:1) என்ற வசனத்தின்படி, கர்த்தாவே உமது செட்டையில் என்னை மறைத்துக்கொள்ளும் என்று ஜெபியுங்கள்.

தேவனே! என்னையும், என் வீட்டையும், எனக்குண்டான எல்லாவற்றையும் வேலியடையும் என்று வேண்டுங்கள் (யோபு 1:10, 11).

4. விசுவாசத்தை அறிக்கையிடுங்கள் (மூன்று நிமிடங்கள்)

இஸ்ரவேலே, கேள்; நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். (உபா 6:4) என்ற வசனத்தின்படி, கர்த்தாவே நீர் ஒருவரே என் தெய்வம் என்று அறிக்கையிடுங்கள்.

நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக (உபா 6:5) என்ற வசனத்தின்படி கர்த்தாவே உம்மை நேசிக்கிறேன் என்று சொல்லுங்கள்.

குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும் (நீதி 21:31) என்ற வசனத்தின்படி, நிச்சயமாக இன்றைய நாளை கர்த்தர் உங்களுக்கு ஆசீர்வாதமாக்கித் தருவார்.

ஜெபமுறைமை 2

வாழ்வை மாற்றும் ஜெபமுறைமை

வாலிபருக்கும் புதிய விசுவாசிகளுக்கும் ஏற்ற எளிய முறைமை
(15 முதல் 30 நிமிடங்கள்)

1. தேவனைப் புகழ்ந்து துதியுங்கள் (ஐந்து நிமிடங்கள்)

தேவனுடைய பெயரையும், அவருடைய குணாதிசயங்களையும் சொல்லி அவரைப் புகழுங்கள். அல்லது ஒரு துதிப்பாடலைப் பாடுங்கள்.

2. தேவனுக்கு நன்றி செலுத்துங்கள் (ஐந்து நிமிடங்கள்)

சமாதானம், ஆரோக்கியம், நல்ல குடும்பம், வசதிகள், ஞானம் தந்து நம்மை ஆசீர்வதித்ததற்காகவும், ஆண்டவர் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து அவருக்கு நன்றி செலுத்துங்கள்

3. உங்கள் பாவங்களை அறிக்கையிடுங்கள் (ஐந்து நிமிடங்கள்)

உங்கள் தவறுகளையும், தோல்விகளையும், பாவங்களையும், செய்ய மறந்த கடமைகளையும் அறிக்கையிடுங்கள். விசுவாசத்தோடு தேவனின் மன்னிப்பையும், விடுதலையையும் பெற்றுக் கொள்ளுங்கள். பாவங்களை மேற்கொள்ளவும், மீண்டும் அப்பாவங்களில் விழாதிருக்கவும் தேவனிடம் விசேஷ கிருபையைக் கேளுங்கள்.

4. பிறருக்காக பரிந்து ஜெபியுங்கள் (ஐந்து நிமிடங்கள்)

உங்கள் உறவுகளுக்காக, சபைக்காக, சமுதாயத்திற்காக, மிஷன் ஊழியங்களுக்காக, தேசத்திற்காக இப்புத்தகத்தில் உள்ள ஜெபக்குறிப்புகளைப் பயன்படுத்தி ஊக்கமாய் ஜெபியுங்கள்.

5. உங்களுக்காக வேண்டுங்கள் (ஐந்து நிமிடங்கள்)

உங்கள் குடும்பத்திற்காக, சொந்த தேவைகளுக்காக, ஆரோக்கியத்திற்காக, குறிக்கோள்களுக்காக, திட்டங்களுக்காக ஜெபியுங்கள்

6. அமைதியாய் அமருங்கள் (ஐந்து நிமிடங்கள்)

அமைதலாயிருங்கள். ஆண்டவர் இயேசுவின் அன்பு, பரிசுத்தம், நன்மை, தயவு, கிருபைக்கு நேராக உங்கள் மனதை திருப்புங்கள். அவருடைய பாதத்தில் அமைதலாய் அமர்வது அவரோடு ஒரு நெருக்கத்தையும், ஐக்கியத்தையும் உண்டாக்கும். உங்களை சூழ்ந்து நிற்கும் அவரின் அன்பான, வல்லமையான பிரசன்னத்தை ஆவியில் உணருங்கள்.

ஜெபமுறைமை 3

பரமண்டல ஜெபமுறைமை

வளரும் விசுவாசிகளுக்கான முறைமை (30 நிமிடங்கள்)

1. தேவனுடைய நாமத்தை துதியுங்கள் (ஐந்து நிமிடங்கள்)

நீங்கள் ஜெபம்பண்ண வேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக (மத் 6:9).

முதலாவது, தேவனுடைய பெயர்கள், அவரது குணங்கள், அவர் உங்களுக்குச் செய்த நன்மைகளைச் சொல்லி புகழ்ந்து, துதியுங்கள்.

2. இந்த நாளில் தேவசித்தத்திற்கு அர்ப்பணித்து ஜெபியுங்கள் (ஐந்து நிமிடங்கள்)

உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக (மத் 6:10).

3. உங்கள் தேவைகளுக்காக ஜெபியுங்கள் (ஐந்து நிமிடங்கள்)

எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும் (மத் 6:11).

4. பாவங்களை அறிக்கை செய்யுங்கள் (ஐந்து நிமிடங்கள்)

எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் (பாவக்) கடன்களை எங்களுக்கு மன்னியும் (மத் 6:12).

5. சத்துருவிடமிருந்து பாதுகாக்க ஜெபியுங்கள் (ஐந்து நிமிடங்கள்)

எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்.... (மத் 6:13).

6. விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள் (ஐந்து நிமிடங்கள்)

... ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென் என்பதே (மத் 6:13).

தேவன்மீதும், அவர் வார்த்தையின்மீதும் நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை அறிக்கையிடுங்கள்

தூபவர்க்க ஜெபமுறைமை

வளரும் விசுவாசிகளுக்கான முறைமை (30 நிமிடங்கள்)

நம் ஜெபங்கள் தூபமாக தேவனுக்கு முன்பாக எழும்புகின்றன (வெளி 8:4). ஆசரிப்புக் கூடாரத்தில் பயன்படுத்தப்படுகிற தூபவர்க்கத்தில் நான்கு பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன (யாத் 30:34). இவைகள் நாம் எப்படி ஜெபிக்க வேண்டும் என்பதற்கு திருஷ்டாந்தமாக உள்ளன.

1. வெள்ளைப்போளம் - கண்ணீரின் ஜெபத்திற்கு அடையாளம் (ஐந்து நிமிடங்கள்)

வெள்ளைப்போளம் எபிரேய மொழியில் **நட்டாப்** என்று அழைக்கப்படுகிறது. இதற்கு துளித்துளியாக விழுதல் என்று பொருள். எனவே நாம் உள்ளம் உடைந்து, கண்ணீர் துளி வெளிப்பட ஜெபிக்கும் ஜெபம் வல்லமை உடையது.

இயேசு மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது (லூக் 22:44) என்ற வசனத்தின்படி ஆத்துமாக்களின் இரட்சிப்புக்காக கண்ணீரோடு ஜெபம்பண்ணுங்கள்!

2. குங்கிலியம் - ஊக்கமான ஜெபத்திற்கு அடையாளம் (ஐந்து நிமிடங்கள்)

குங்கிலியம் எபிரேயத்தில் **ஷெக்கலெத்** என்று அழைக்கப்படுகிறது. இதற்கு சிங்கத்தின் கர்ஜனை என்று பொருள். இது ஊக்கமாக, பலத்த சத்தத்தோடு ஜெபிப்பதற்கு அடையாளமாக இருக்கிறது.

அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டார் (எபி 5:7) என்ற வசனத்தின்படி உங்கள் தனிப்பட்ட தேவைகளுக்காக ஊக்கமாக ஜெபம் செய்யுங்கள்!

3. **அல்பான் பிசின் -தாழ்மையான ஜெபத்திற்கு அடையாளம் (ஐந்து நிமிடங்கள்)**

அல்பான் பிசின் எபிரேய மொழியில் **கெல்பெனா** என்று அழைக்கப்படுகிறது. இதற்கு கொழுப்பு என்று அர்த்தம். இது நம் பெருமைகள் தகனிக்கப்பட்டு, தாழ்மையின் சிந்தையை வெளிப்படுத்துவதற்கு அடையாளமாக இருக்கிறது.

யெஷீரன் கொழுத்துப்போய் உதைத்தான்; கொழுத்து, ஸ்தூலித்து, நிணம் துன்னினபோது, தன்னை உண்டாக்கின தேவனை விட்டு, தன் ரட்சிப்பின் கன்மலையை அசட்டைபண்ணினான் (உபா 32:15) என்று வசனத்தில் சொல்லப்பட்டுள்ளதே. தேவனே! நான் யெஷீரனைப்போல அல்லாமல், என் வாழ்வின் உயர்வைக் குறித்த பெருமைகளை பலிபீடத்தில் தகனித்து, தாழ்மையை தரித்துக்கொள்ள கிருபை தாரும் என்று அர்ப்பணித்து ஜெபியுங்கள்!

4. **சாம்பிராணி - சுத்திகரிப்பின் ஜெபத்திற்கு அடையாளம் (ஐந்து நிமிடங்கள்)**

சாம்பிராணி எபிரேய மொழியில் **லெபோனா** என்று அழைக்கப்படுகிறது இதற்கு இதயம் என்று பொருள். இது வெண்மையான (பரிசுத்தத்தமான) இதயத்திலிருந்து எழும்பும் வெண்புகை போன்ற ஜெபத்திற்கு அடையாளமாக இருக்கிறது

நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்; என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன் (சங் 51:7) என்ற வசனத்தின்படி தேவனே என் இதயத்தை சுத்திகரித்து வெண்மையாக்கும் என்று ஒப்புக்கொடுத்து ஜெபியுங்கள்!

ஆசரிப்புக்கூடார ஜெபமுறைமை

முதிர்ந்த விசுவாசிகள், ஊழியர்களுக்கான முறைமை (60 நிமிடங்கள்)

1. ஆசரிப்பு கூடார வாசல் - துதிக்கு அடையாளம் (பத்து நிமிடங்கள்)

அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள் (சங் 100:4) என்ற வசனத்தின்படி, தேவசமூகத்தில் பிரவேசிக்க, முதலாவது தேவனை புகழ்ந்து துதியுங்கள். ஒரு துதிப்பாடலைப் பாடி அவரை மகிமைப் படுத்துங்கள்.

2. பலிபீடம் - அர்ப்பணிப்புக்கு அடையாளம் (ஐந்து நிமிடங்கள்)

அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை (ரோமர் 12:1) என்ற வசனத்தின்படி, உங்கள் சரீரத்தை ஜீவபலியாக அர்ப்பணியுங்கள். உங்கள் அவயவங்களை நீதியின் அவயவங்களாக ஒப்புக்கொடுங்கள்.

3. வெண்கலத் தொட்டி - சுத்திகரிப்புக்கு அடையாளம் (பத்து நிமிடங்கள்)

அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் (1யோவா 1:7) என்ற வசனத்தின்படி, தேவனுக்கு பிரியமில்லாத பாவங்கள், துர்ச்சிந்தனைகள், துர்க்குணங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட மன்றாடுங்கள்.

4. குத்துவிளக்கு - அபிஷேகத்திற்கு அடையாளம் (பத்து நிமிடங்கள்)

...குத்துவிளக்குக்கு வலதுபுறமாகவும் அதற்கு இடதுபுறமாகவும் இருக்கிற இந்த இரண்டு ஒலிவமரங்கள் என்னவென்று கேட்டேன் (சக 4:11). அப்பொழுது அவர்; இவைகள் இரண்டும் சர்வலோகத்துக்கும் ஆண்டவராயிருக்கிறவரின் சமுகத்தில் நிற்கிற அபிஷேகம் பெற்றவர்கள் என்றார் (சக 4:14) என்ற வசனத்தின்படி, அபிஷேகத்தினால் தேவன் உங்களை நிரப்பும்படி வேண்டுங்கள்.

5. **சமூகத்து அப்பம் - தேவனுடைய வார்த்தைக்கு அடையாளம் (பதினைந்து நிமிடங்கள்)**

...மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார். (மத் 4:4) என்ற வசனத்தின்படி, வேதவசனமே அப்பமாக இருப்பதால், உங்கள் வேதத்தை தவறாமல் வரிசைக்கிரமமாக வாசியுங்கள்.

6. **தூபபீடம் - ஜெபத்திற்கு அடையாளம் (பத்து நிமிடங்கள்)**

அப்படியே பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தப்பட்ட தூபவர்க்கத்தின் புகையானது தூதனுடைய கையிலிருந்து தேவனுக்கு முன்பாக எழும்பிற்று (வெளி. 8:4) என்ற வசனத்தின்படி, நம் ஜெபங்கள் தூபங்களாக தேவசமூகத்திற்கு செல்வதால், இப்புத்தகத்தில் உள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி, முதலாவது உங்களுக்காக, பின் உங்கள் குடும்பத்திற்காக, அதன் பின் உங்கள் சபை போதகர் மற்றும் விசுவாசக் குடும்பங்களுக்காக, நிறைவாக தேசத்திற்காக மன்றாடி ஜெபம் பண்ணுங்கள்.

7. **உடன்படிக்கை பெட்டி - தேவனுடைய வழிநடத்துதலுக்கு அடையாளம் (ஐந்து நிமிடங்கள்)**

அங்கே நான் உன்னைச் சந்திப்பேன்; கிருபாசனத்தின்மீதிலும் சாட்சிப் பெட்டியின்மேல் நிற்கும் இரண்டு கேருபீன்களின் நடுவிலும் இருந்து நான் இஸ்ரவேல் புத்திரருக்காக உனக்குக் கற்பிக்கப் போகிறவைகளையெல்லாம் உன்னோடே சொல்லுவேன் (யாத் 25:22) என்ற வசனத்தின்படி, கர்த்தர் நம்மோடு பேசுகிற தேவனாக இருக்கிறார். எனவே, தேவன் உங்களோடு பேசும்படியாக, கண்களைமூடி அமைதியாக காத்திருங்கள். கர்த்தர் உங்கள் ஆழ்மனதில் சில திட்டங்களை, சில வசனங்களை அல்லது வார்த்தைகளை தருவார். அவைகளுக்கு உங்களை அர்ப்பணியுங்கள்.

குடும்ப ஐக்கிய ஜெபமுறைமை

குடும்பமாய் சேர்ந்து ஜெபிக்க ஏற்ற முறைமை (30 முதல் 60 நிமிடங்கள்)

உறுதியான குடும்பத்திற்கு குடும்ப ஜெபம் அத்தியாவசியமானது. தினமும் கூடி கர்த்தருடைய வார்த்தையை வாசித்து, கலந்துரையாடி, ஜெபிக்கும் குடும்பத்தில் அன்பு, ஐக்கியம், சமாதானம், ஆசீர்வாதம் பெருகுவதை நீங்கள் காண முடியும். எனவே குடும்பமாக ஜெபிக்க ஒரு நேரத்தை தீர்மானித்து கீழே அதைக் குறியுங்கள்.

தினமும் .... மணி முதல் .... மணிவரை குடும்பமாக ஜெபிக்கத் தீர்மானிக்கிறோம்.

குடும்ப ஐக்கிய ஜெப நிகழ்ச்சி நிரல்:

1. **துதிப்பாடல் (5 நிமிடம்)**
   தேவனுக்கு நன்றி சொல்லும் ஒரு பாடல் அல்லது அவரைத் துதிக்கும் ஒருபாடலை குடும்பமாகப் பாடுங்கள்.

2. **வேத வாசிப்பு (5 நிமிடம்)**
   சங்கீதங்களை தினமும் ஒரு சங்கீதம் வீதம் தொடர்ச்சியாக வாசிக்கலாம் அல்லது நீதிமொழிகளில் 31 அதிகாரங்கள் உள்ளன. தினமும் ஒரு அதிகாரம் வீதம் ஒரு மாதம் முழுவதும் நீங்கள் வாசிக்கலாம். அல்லது ஆதியாகமம் முதல் அல்லது மத்தேயு முதல் வரிசைக்கிரமமாக வேதத்தை வாசிக்கலாம்.

3. **கலந்துரையாடல் (10 நிமிடம்)**
   வாசித்த வேத பகுதிகளிலிருந்து சில கேள்விகளை குடும்பத் தலைவர் கேட்கலாம். அல்லது யாராவது ஒருவர் சுருக்கமாக அந்த வேத பகுதியிலிருந்து தாங்கள் புரிந்துகொண்டதை விளக்கிச் சொல்லலாம்.

4. **ஜெபநேரம் (10 நிமிடம்)**
   தினமும் ஒருவர் வீதம் குடும்பத்தில் உள்ள யாவரும் ஜெபிக்க வாய்ப்புக் கொடுங்கள். நீங்கள் ஜெபிப்பதற்கு ஏற்ற ஜெபக் குறிப்புகள் இப்புத்தகத்தில் உள்ளன. அவைகளைப் பயன்படுத்தி உற்சாகமாக ஜெபியுங்கள்.

குடும்ப உபவாச ஜெபமுறைமை

காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை

நேரம்		நிகழ்ச்சி
10.00	10.15	துதி ஸ்தோத்திர பலி
10.15	10.30	பாவ அறிக்கை (ஜெபக் கையேடு பக்கம் 21)
10.30	11.00	பாடல் ஆராதனை
11.00	11.30	வேத தியானம் (அப்போஸ்தலருடைய நடபடிகள் 10வது அதிகாரம்)
11.45	12.00	தேனீர் இடைவேளை
12.00	12.30	சபைக்காக மன்றாட்டு ஜெபம் (ஜெபக் கையேடு பக்கம் 42)
12.30	12.45	பாடல் ஆராதனை
12.45	01.15	உங்கள் ஊருக்காக மன்றாட்டு ஜெபம் (ஜெபக் கையேடு பக்கம் 52)
01.15	01.45	ஒவ்வொருவரும் தனித்து வேதத்தை வாசித்து ஜெபம் செய்தல் (உபாகமம் 28வது அதிகாரம்)
01.45	02.00	தேனீர் இடைவேளை
02.00	02.30	தேசத்திற்காக மன்றாட்டு ஜெபம் (ஜெபக் கையேடு பக்கம் 53)
02.30	02.45	பாடல் ஆராதனை
02.45	03.15	குடும்ப ஆசீர்வாத ஜெபம் மற்றும் குடும்பத்தின் தேவைகளுக்காக மன்றாட்டு ஜெபம் (ஜெபக் கையேடு பக்கம் 31)
03.15	03.45	வேத தியானம் (மத்தேயு 6வது அதிகாரம்)
03.45	04.00	நன்றி பலி மற்றும் இறுதி ஜெபம்

உங்கள் ஜெபவிண்ணப்பங்களை எழுதிவைத்து தினமும் விசுவாசத்தோடு ஜெபம்பண்ணுங்கள்

விண்ணப்பம் வைத்த நாள்	விண்ணப்பக் குறிப்புகள்	விண்ணப்பத்திற்கு பதில் வந்த நாள்

உங்கள் ஜெபவிண்ணப்பங்களை எழுதிவைத்து தினமும் விசுவாசத்தோடு ஜெபம்பண்ணுங்கள்

விண்ணப்பம் வைத்த நாள்	விண்ணப்பக் குறிப்புகள்	விண்ணப்பத்திற்கு பதில் வந்த நாள்

நீங்கள் இரட்சிப்புக்குள் நடத்த விரும்பும் நபர்களின் பெயர்களை எழுதி மன்றாடி ஜெபம்பண்ணுங்கள்

விண்ணப்பம் வைத்த நாள்	இரட்சிப்புக்காக நான் ஜெபிக்க விரும்பும் நபர்களின் பெயர்கள்	இரட்சிக்கப்பட்ட நாள்

நீங்கள் இரட்சிப்புக்குள் நடத்த விரும்பும் நபர்களின் பெயர்களை எழுதி மன்றாடி ஜெபம்பண்ணுங்கள்

விண்ணப்பம் வைத்த நாள்	இரட்சிப்புக்காக நான் ஜெபிக்க விரும்பும் நபர்களின் பெயர்கள்	இரட்சிக்கப்பட்ட நாள்

தனிப்பட்ட தேவைகளுக்கான ஜெபக்குறிப்புகள்

நாள் 1

தேவன் உங்களை சுத்திகரிக்கும்படி ஜெபியுங்கள்

1. அதிகாலையில் உமது சமுகத்தைத் தேடாமல் போனதையும், மற்றவர்களுக்காக மன்றாடி ஜெபிக்க மறந்த பாவத்தையும் மன்னியும் (1சாமு. 12:23)

2. கர்த்தாவே, உம்முடைய வேதத்தை நேசித்து, வாசித்து, அப்பியாசிக்காத பாவத்தை எனக்கு மன்னியும் (தானியேல் 9:5).

3. சபை ஆராதனை, ஐக்கியம், ஜெபங்களில் பங்கெடுக்காமல் அலட்சியமாக வாழ்ந்த பாவங்களை எனக்கு மன்னியும் (எபி. 10:25).

4. ஊழியர்கள் மூலமாக நீர் என்னோடு பேசியும், உம்முடைய வசனத்திற்கு கீழ்ப்படியாமல் வாழ்ந்த பாவத்தை மன்னியும் (தானியேல் 9:9)

5 ஆண்டவரே, அழிந்துகொண்டிருக்கும் ஆத்துமாக்களுக்கு நற்செய்தி அறிவிக்காமல் அசதியாக வாழ்ந்ததால் மன்னியும் (1கொரி. 9:16).

6. முதலாவது தேவராஜ்யத்தைத் தேடாமல், உமக்கு மகிமை கொண்டுவராமல், சுயநலமாக வாழ்ந்த பாவத்தை மன்னியும் (மத். 6:33).

7. புறஜாதிகள் முன்பாக சாட்சி இல்லாமல் வாழ்ந்து உமது நாமம் தூஷிக்கப்படும்படி நடந்ததற்காக மன்னியும் (மத். 5:16).

8. கர்த்தாவே! என் கண்ணின் பார்வைகள், நெஞ்சின் நினைவுகள், கையின் கிரியைகள், கால்களின் நடைகளில் உமக்கு பிரியமில்லாதவைகளை செய்ததால் என்னை மன்னியும் (பிர. 11:9).

9. ஆவியானவரே! என்னை ஆராய்ந்து, என்னை சோதித்து, வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும் (சங்கீதம் 139: 23,24)

10. இயேசுவே! உமது கிருபையின்படி எனக்கு இரங்கும். உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் . . . சுத்திகரியும் (சங்கீதம் 51:1)

நாள் 2

உங்கள் சரீரத்துக்குரிய ஆசீர்வாதத்திற்காக ஜெபியுங்கள்

1. முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும் (மத் 6:33) என்ற வாக்கின்படி முதலாவது உம்மைத் தேட என்னை அர்ப்பணிக்கிறேன்!

2. ...உனக்குச் சிறந்த வஸ்திரங்களைத் தரிப்பித்தேன் (சக 3:4) என்ற வாக்கின்படி நல்ல உடைகளால் என்னை ஆசீர்வதிப்பீராக!

3. எங்கள் பரிகாரியாகிய கர்த்தாவே! உம்முடைய நியமங்களைத் கைக்கொண்டால், எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் எங்களுக்கு வரப்பண்ணேன் (யாத் 15:26) என்ற வாக்கின்படி எனக்கு உம் சுகத்தைத் தாரும்.

4. ...ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள் (1பேது 5:6) என்ற வசனத்தின்படி ஏற்றவேளையில் என்னை உயர்த்துவீராக!

5. கர்த்தர் உன் போக்கையும் உன்வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்குங் காப்பார் (சங் 121:8) என்ற வாக்குத்தத்தத்தின்படி என் பிரயாணங்களில் என்னைப் பாதுகாப்பீராக!

6. உன் தேவனாகிய கர்த்தர் உன்னுடைய எல்லாக் கிரியைகளிலும், நீ கையிட்டுச் செய்யும் எல்லாக் காரியங்களிலும் உன்னை ஆசீர்வதிப்பார் (உபா 15:10) என்ற வாக்கின்படி என் வேலை மற்றும் தொழிலை ஆசீர்வதிப்பீராக!

7. திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலைசெய்து, பிரயாசப்படக்கடவன் (எபே 4:28) என்ற வசனத்தின்படி, மற்றவர்களுக்கு கொடுக்கும் விதத்தில் என் கரங்களை ஆசீர்வதிப்பீராக!

8. கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்த புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள் (எபே 4:29) என்ற கட்டளையின்படி என் நாவைக் காத்துக்கொள்ள கிருபை தாரும்.

9. என் கண்களோடே உடன்படிக்கைபண்ணின நான் ஒரு கன்னிகையின்மேல் நினைப்பாயிருப்பதெப்படி? (யோபு 31:1) என்ற வசனத்தின்படி என் கண்களின் பார்வையில் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ள உதவி செய்யும்!

10. எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும் (நீதி 4:23) என்ற வசனத்தின்படி என் இதயத்தைக் காத்துக்கொள்ள அநுக்கிரகம் செய்யும்!

நாள் 3

ஆத்துமாவுக்குரிய ஆசீர்வாதங்களுக்காக ஜெபியுங்கள்

1. இயேசுவே! என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் (யோவா 14:27) என்ற உம் வாக்கின்படியே என் ஆத்துமாவில் உம் சமாதானத்தை அருளுவீராக!

2. தேவனே! உம்டைய சந்தோஷம் என் ஆத்துமாவில் நிலைத்திருக்கும்படிக்கு (யோவா 15:11) கிருபை செய்வீராக!

3. சகல உபத்திரவங்களிலேயும் எங்களுக்கு ஆறுதல்செய்கிறவரே! (2கொரி 1:4) என் ஆத்துமாவில் எப்போதும் உம் ஆறுதலைத் தருவீராக!

4. என் ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர்செய்கிற மாம்சஇச்சைகளை விட்டு விலக (1பேது 2:11) எனக்கு பெலன் அருளுவீராக!

5. என் முழு இருதயத்தோடும் என் முழு ஆத்துமாவோடும் என் முழுப் பலத்தோடும் என் முழுச்சிந்தையோடும் உம்மில் அன்புகூர (லூக் 10:27) கிருபை செய்யும்!

6. வாழ்க்கை என்னும் கடலில் உம்மேல் என் ஆத்துமா வைத்திருக்கும் நம்பிக்கை ஆத்தும நங்கூரமாக (எபி 6:19) என்னைக் காக்க அருள் செய்யும்!

7. ஆத்துமா அறிவில்லாமலிருப்பது நல்லதல்ல (நீதி 19:2) என்ற வசனத்தின்படி, என் ஆத்துமா உம்மைக் குறித்த அறிவில் வளர உதவி செய்யும்!

8. என் ஆத்துமாவை இரட்சிக்க வல்லமையுள்ள உம் வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளும் (யாக் 1:21) மன பக்குவத்தை எனக்குத் தாரும்

9. என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங் கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் (மத் 11:29) என்ற வாக்கின்படி உம்மிடத்தில் கற்றுக்கொள்ள கிருபை தாரும்!

10. பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றி1லும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன் (3யோவா 1:2) என்ற உம் வாழ்த்துதல் என் வாழ்வில் நிறைவேற அநுக்கிரகம் செய்யும்!

நாள் 4

ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக ஜெபியுங்கள்

1. இயேசுவே! உம் இரத்தத்தினாலும், உபதேசத்தினாலும், பரிசுத்த ஆவியினாலும் என் ஆவியை சுத்தமாக்குவீராக (யோவா 15:3; 1யோவான் 1:9)

2. என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன்; நீங்கள் உயிரடைவீர்கள் என்ற வாக்கின்படியே உம் ஆவியினால் என்னை உயிர்ப்பிப்பீராக (எசே 37:14)

3. ஆவியின் கனியினாலும், ஆவியின் வரங்களினாலும் என்னை நிரப்பி, உம் வருகைக்கு என்னை ஆயத்தப்படுத்தும் (கலாத்தியர் 5:22,23; 1கொரிந்தியர் 13)

4. கர்த்தாவே! நான் எப்பொழுதும் ஆவியினாலே உமக்கு ஆராதனை செய்யத்தக்கதாக (பிலி 3:3) எனக்கு அநுக்கிரகம் செய்வீராக!

5. ஆவியானவரே! நான் எப்பொழுதும் ஆவியிலே அனலாயிருந்து உமக்கு ஊழியஞ்செய்ய (ரோம 12:11) கிருபை தாரும்!

6. தேவனே! சகல பரிசுத்தவான்களுக்காகவும் நான் ஆவியினாலே ஜெபம்பண்ணி, விழித்துக்கொண்டிருக்க (எபே 6:18) உதவி செய்வீராக!

7. ஆண்டவரே! நான் ஆவியினாலே பிழைத்திருந்து, ஆவிக்கேற்றபடி நடக்க (கலா 5:25) அருள்செய்வீராக!

8. என் சரீரத்தாலும் ஆவியாலும் நான் எப்பொழுதும் உம்மை மகிமைப்படுத்த (1கொரி 6:20) அநுக்கிரகம் செய்யும்!

9. என் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், என் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாக இருக்கும்படி காத்துக்கொள்வீராக! (1தெச 5:23)

10. தேவனே! என் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை எப்பொழுதும் என் ஆவியுடனேகூட இருப்பதாக. ஆமென் (கலா 6:18).

நாள் 5

நித்திய ஆசீர்வாதங்களுக்காக ஜெபியுங்கள்

1. தேவனே, உம் குமாரனாகிய இயேசுவை விசுவாசிக்கிறவர்களுக்கு நீர் வாக்களித்த நித்தியஜீவனை (யோவா 3:16) எனக்கு அருள்வீராக!

2. கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன் என்ற வாக்குத்தத்தத்திற்கு (மத் 25:21) என்னை தகுதிப்படுத்துவீராக!

3. இயேசுவே! உம்முடைய நித்திய மகிமைக்காக என்னைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்தி வருதற்காக (1பேது 5:10) ஸ்தோத்திரம்!

4. பரலோகத்திலே நான் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க, தேவரீர் எனக்குக் கிருபை தருவீராக! (மத் 6:20)

5. தேவனே! கைவேலை அல்லாத ஒரு நித்திய வீட்டை பரலோகத்திலே எனக்காக உருவாக்கி வருவதற்காக (2கொரி 5:1) ஸ்தோத்திரம்!

6. காணப்படாத நித்தியமான மகிமை, ஆசீர்வாதங்களை (2கொரி 4:18) உம் வருகையில் நீர் எனக்காக ஆயத்தப்படுத்தித் தருவீராக!

7. ஆண்டவரே! உம்வருகையில் எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்திருப்பதற்கு (பிலி 3:10) என்னைத் தகுதியாக்குவீராக!

8. கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடர (பிலி 3:14) கிருபை அளிப்பீராக!

9. நித்தியமான வீடுகளிலே என்னை ஏற்றுக்கொள்வார் உண்டாகும்படி, அநீதியான உலகப்பொருளால் எனக்குச் சிநேகிதரைச் சம்பாதிக்க (லூக் 16:9) அருள் செய்வீராக!

10. கர்த்தாவே! உமக்கு உண்மையாயிருப்பவர்களுக்கு நீர் வாக்களித்த ஜீவகிரீடத்தை பெறும் (வெளி 2:10) பாக்கியம் அருளுவீராக!

நாள் 6

உங்கள் சுபாவங்கள் மாற ஜெபம் பண்ணுங்கள்

1. இயேசுவே! நான் உம்மிடத்தில் சாந்தத்தையும் மனத்தாழ்மையையும் கற்றுக்கொள்ள (மத் 11:29) அநுக்கிரகம் செய்யும்!

2. தேவனே! நான் எப்போதும் அன்பில் நடந்துகொள்ள (எபே 5:2) எனக்குக் கிருபை செய்வீராக!

3. தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் (ஆப 2:4) என்ற உம் வாக்குத்தத்தத்தின்படி நான் எப்போதும் விசுவாசத்தில் நிலைக்க அருள் செய்யும்!

4. தேவனே! வாக்குத்தத்தங்கள் நிறைவேற பொறுமையோடு நான் காத்திருக்க (எபி 10:36) கிருபை செய்வீராக!

5. இயேசுவே! உம் கற்பனைகளைக் கைக்கொள்ள, எப்போதும் உம் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க (யோவா 15:10) உதவி செய்வீராக!

6. கர்த்தாவே! மனிதர்கள் செய்யும் தவறுகளை மன்னிக்கும் (மத் 6:15) ஒரு இதயத்தை எனக்குத் தருவீராக!

7. ஆண்டவரே! மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோன மக்களைக் காணும்போது எனக்குள் ஒரு மனதுருக்கத்தை (மத் 9:36) தருவீராக!

8. தேவனே! தேவையில் உள்ள மற்றவர்களுக்கு பணிவிடை செய்யும் தாழ்மையின் ஆவியை (மத் 20:26) எனக்குத் தந்தருளும்!

9. இயேசுவே! மேட்டிமையானவைகளை நான் சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்கிச் செல்லும் குணத்தை (ரோம 12:16) எனக்கு அருள்வீராக!

10. இரட்சகர் இயேசுவே! நான் உம் கிருபையிலும் உம்மை அறிகிற அறிவிலும் அதிகமாய் வளர உதவி செய்வீராக! (2பேது 3:18)

நாள் 7

ஆவியின் கனிக்காக (கலா. 5:22-23) ஜெபியுங்கள்

1. **அன்பு:** இயேசுவே! பரிசுத்த ஆவியானவர் மூலமாக உம் அன்பு என் இருயத்தில் ஊற்றப்பட்டு (ரோமர் 5:5), உம்மைப்போல சத்துருவையும் நேசிக்கக் (மத். 5:44) கிருபை தருவீராக!

2. **சந்தோஷம்:** கர்த்தாவே! சிறைச்சாலையிலும் சந்தோஷமாக இருந்த பவுலைப் போல (பிலி. 4:4), நான் எதிர்மறையான சூழ்நிலையிலும் சந்தோஷமாக இருக்க அருள் செய்வீராக!

3. **சமாதானம்:** தன்னைப் பகைத்த நாபாலை மன்னித்து அவன் மனைவி அபிகாயிலின் வெகுமதிகளை ஏற்றுக்கொண்டு அவளை சமாதானத்தோடு அனுப்பிய தாவீதைப்போல (1சாமு. 25:35) நான் யாவரோடும் சமாதானமாக இருக்க உதவி செய்வீராக!

4. **நீடியபொறுமை:** தேவனே! யோபுவைப்போல சோதனைவேளையிலும் நீடிய பொறுமையாக இருக்க (யாக்கோபு 5:11) அநுக்கிரகம் செய்வீராக!

5. **தயவு:** தன்னை ஏமாற்றிய தன் தம்பி யாக்கோபை மன்னித்து அவனுக்கு தயவுசெய்த ஏசாவைப்போல (ஆதி. 33:10) மற்றவர்களுக்கு தயை செய்யும் இதயத்தை எனக்குத் தருவீராக!

6. **நற்குணம்:** தன் மாமியார் நகோமியை நேசித்து போஷித்த நற்குணசாலி ரூத்தைப்போல (ரூத் 3:10) எனக்குள் நற்குணத்தைத் தருவீராக!

7. **விசுவாசம்:** சாத்தியமற்ற நிலையிலும் கர்த்தர் அற்புதம் செய்வார் என்று உம்மை விசுவாசித்த ஆபிரகாமைப்போல (ஆதி. 15:6) எல்லா சூழ்நிலையிலும் உம்மை விசுவாசிக்க உதவி செய்வீராக!

8. **சாந்தம்:** கோபப்பட வேண்டிய நேரத்திலும் சாந்தத்தைத் வெளிப்படுத்திய மோசேயைப்போல (எண். 12:3) எனக்குள் சாந்த குணத்தைத் தருவீராக!

9. **இச்சையடக்கம்:** சோதனை தன்னை தேடிவந்த போதும் தேவபயத்தினால் இச்சையடக்கத்தோடு வாழ்ந்த யோசேப்பைப்போல (ஆதி. 39:9) வாழ எனக்குக் கிருபை செய்வீராக!

10. ஆவியானவரே! மேற்கண்ட கனிகள் அனைத்தும் என்னில் உருவாக எனக்குள் நீர் கிரியை நடப்பிக்க என்னை முற்றிலுமாக அர்ப்பணித்து ஜெபிக்கிறேன்!

நாள் 8

ஆவியின் வரங்களுக்காக (1கொரி. 12) ஜெபியுங்கள்

1. **ஞானத்தைப் போதிக்கும் வசன வரம்:** தேவனே! உம்மிடமிருந்து வெளிப்பாடு களைப் பெற்று, சிக்கலான பிரச்சனைகளுக்கு சரியான தீர்வுகளைக் காணும் இவ்வரத்தை எனக்குத் தருவீராக!
2. **அறிவை உணர்த்தும் வசன வரம்:** ஆவிக்குரிய ஒரு பிரச்சனையில் தேவசித்தத்தையும், தேவதிட்டத்தையும் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் புரிந்துகொள்ளும் அறிவாகிய வரத்தை தந்தருளும்!
3. **விசுவாச வரம்:** எதிர்மறையான சூழ்நிலையிலும் சந்தேகத்திற்கு இடமின்றி உம்மை நான் விசுவாசிக்கவும், மற்றவர்களுக்குள் அந்த விசுவாசத்தை ஊட்டவும் எனக்கு வரம் தருவீராக!
4. **குணமாக்கும் வரம்:** சரீரத்திலோ அல்லது ஆத்துமாவிலோ வியாதிப்பட்டவர்க ளுக்காக நான் ஜெபித்து இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் அவர்களை குணமாக்கும் வரத்தை எனக்குத் தந்தருளும்!
5. **அற்புதங்களைச் செய்யும் சக்தியின் வரம்:** இயற்கை விதிகளுக்குள் குறுக்கிட்டு இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களைச் செய்து உம் சுவிசேஷத்தின் வல்லமையை வெளிப்படுத்த எனக்குக் கிருபை அருளுவீராக!
6. **தீர்க்கதரிசனம் உரைக்கும் வரம்:** தேவனே! உம்மிடமிருந்து இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் செய்தியைப் பெற்று மனுஷருக்கு பக்திவிருத்தி, புத்தி, ஆறுதல் உண்டாகப் பேசும் (1கொரி. 14:3) வரத்தை எனக்கு தந்தருளுவீராக!
7. **ஆவிகளைப் பகுத்தறியும் வரம்:** ஒரு காரியம் நீதியானதா? அது தேவனிடமிருந்து வந்ததா? அல்லது வானமண்டலங்களின் பொல்லாத ஆவிகளின் கிரியையா என்பதையும், ஒரு மனிதனின் வார்த்தை மற்றும் செய்கையின் நோக்கம் என்ன என்பதையும் பகுத்தறியும் வரத்தை எனக்குத் தந்தருளும்!
8. **பற்பல பாஷைகளைப் பேசும் வரம்:** நான் அறியாத அந்நிய மொழியைப் பேசுகிறவர்களோடு இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் அவர்கள் மொழியில் உம்மகிமையைக் குறித்து பேச எனக்கு அருள்செய்வீராக!
9. **பாஷைகளை வியாக்கியானம்பண்ணும் வரம்:** அந்நிய மொழியில் சொல்லப்படும் செய்தியை இயற்கைக்கு அப்பாற்பட்டவிதத்தில் நான் புரிந்துகொண்டு என் சொந்த மொழியில் அதை மக்களுக்கு எடுத்துரைக்க எனக்கு வரம் தருவீராக!
10. **ஊழிய வரம்** (ரோம 12:7): தேவனே! சுயநலம் இல்லாமல் தேவையில் உள்ளவர்களுக்கு நான் மனதார பணிவிடை ஊழியத்தைச் செய்யும் வரத்தை எனக்குத் தருவீராக!
11. **பகிர்ந்துகொடுக்கும் வரம்** (ரோம 12:8): கர்த்தாவே! நீர் எனக்குத் தரும் நன்மைகளை தேவையில் உள்ளவர்களுக்கும், ஊழியங்களுக்கும் நான் தாராளமாகப் பகிர்ந்துகொடுக்கும் வரத்தை எனக்கு அருளுவீராக!
12. **நிர்வாக வரம்:** முதலாளியானவன் ஜாக்கிரதையாக இருக்கக்கடவன் (ரோம 12:8) என்ற வசனத்தின்படி நீர் தந்த பொருட்களையும், மனிதர்களையும், ஊழியத்தை யும் தேவசித்தத்தின்படி நிர்வாகம் செய்ய எனக்கு வரம் தாரும்!

நாள் 9

பத்து கட்டளைகளின்படி ஜெபியுங்கள்

1. என்னை பாவ அடிமைத்தனத்தில் இருந்து மீட்டெடுத்த என் தேவனாகிய கர்த்தர் நீரே (யாத் 20:2). உம்மையன்றி எனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருப்பது இல்லை என்று அறிக்கையிடுகிறேன் (யாத் 20:3)!
2. ஒரு சிலையையோ அல்லது யாதொரு விக்கிரகத்தையோ நான் எனக்கு உண்டாக்குவது இல்லை என்றும் (யாத் 20:4), நான் அவைகளை வணங்கி வழிபடுவது இல்லை என்றும் அறிக்கையிடுகிறேன் (யாத் 20:5)!
3. என் தேவனாகிய கர்த்தாவே! உம்முடைய நாமத்தை நான் வீணிலே வழங்காதபடி (யாத் 20:7) எனக்குக் கிருபை தருவீராக!
4. கர்த்தருடைய நாளாகிய (ஞாயிறு) ஓய்வுநாளிலே நானோ, என் வீட்டாரோ சொந்த வேலைகளைச் செய்யாமல் அந்த நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க (யாத் 20:8) எங்களுக்கு உணர்வைத் தருவீராக!
5. என் தேவனாகிய கர்த்தர் எனக்குக் கொடுத்திருக்கிற தேசத்திலே என் வாழ்நாட்கள் நீடித்திருப்பதற்கு, என் தகப்பனையும் என் தாயையும் கனம்பண்ண (யாத் 20:12) எனக்கு ஞானத்தைத் தருவீராக!
6. என் வார்த்தையாலோ அல்லது செயலாலோ மற்றவர்களை நான் கொலை செய்யாதபடி என்னைக் காத்துக்கொள்ள (யாத் 20:13) உதவி செய்வீராக!
7. பிறனுடைய மனைவியோடு நான் விபசாரம் செய்யாதபடி (யாத் 20:14) என் ஆத்துமாவைப் பாதுகாத்துக்கொள்ள கிருபை செய்வீராக!
8. பிறருக்குச் சொந்தமான பொருளையோ அல்லது பணத்தையோ நான் களவு செய்யாதபடி (யாத் 20:15) என் கரங்களைக் காத்துக்கொள்வீராக!
9. பிறனுக்கு விரோதமாகப் பொய்ச் சாட்சி சொல்லாதபடி (யாத் 20:16) உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்ல எனக்குத் தைரியத்தைத் தருவீராக!
10. பிறனுடைய வீட்டையோ, மனைவியையோ, வேலைக்காரரையோ, எருதையோ (வேலையையோ, தொழிலையோ, வருமானத்தையோ), கழுதையையோ (வாகனத்தையோ), பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் நான் இச்சியாதபடி (யாத் 20:17) என் இருதயத்தைக் காத்துக்கொள்ள உதவி செய்வீராக!

நாள் 10

விசுவாச அறிக்கை ஜெபம்

1. என் தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் (உபா 6:4). இயேசுவே என் உயிருள்ளவரை உம்மை மட்டுமே வணங்குவேன் என்று அறிக்கையிடுகிறேன்!

2. பிதாவே! தாயின் கருவில் உருவாகும் முன்னரே நீர் என்னை பெயர் சொல்லி அழைத்து அறிந்திருக்கிறீர் (எரே. 1:5) என்பதை நான் விசுவாசிக்கிறேன்!

3. கர்த்தராகிய உம்மைத் தெய்வமாகக் கொண்ட நானும், என் வீட்டாரும் பாக்கியவான்கள் (சங். 33:12) என்பதை அறிக்கை செய்கிறேன்!

4. என்னை அழைத்தவரே! நீர் என்னை ஆசீர்வதித்து என்மூலமாய் என் இன, ஜன, பந்துக்களை இரட்சித்து ஆசீர்வதிப்பீர் (ஆதி. 12:2,3) என்று விசுவாசிக்கிறேன்!

5. கர்த்தாவே! நான் எதையாவது உம் சித்தப்படி கேட்டால் நீர் என் ஜெபத்திற்கு செவிகொடுக்கிறீர் (1யோவா. 5:14) என்பதை நான் மனப்பூர்வமாக விசுவாசிக்கிறேன்!

6. கர்த்தாவே, நீர் என் மேய்ப்பராக இருப்பதால் எனக்கு ஒரு குறைவும் வராது (சங். 23:1) என்று நான் உறுதியாக விசுவாசிக்கிறேன்!

7. என் தகப்பனே! நீர் என்னைவிட்டு விலகும் இல்லை. என்னைக் கைவிடுவதும் இல்லை (யோசுவா 1:5) என்பதை நான் முழுஉள்ளத்தோடு விசுவாசிக்கிறேன்!

8. எனக்கு விரோதமாக உருவாக்கப்படும் மந்திரவாதமோ, சூனியங்களோ எந்த ஆயுதமும் வாய்க்காதே போகும் (ஏசா. 54:17) என்பதை நான் அறிக்கையிடுகிறேன்!

9. ஆண்டவரே! உம்முடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டுள்ள எனக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது (ரோம. 8:28) என்பதை நான் விசுவாசிக்கிறேன்!

10. தேவனே! என் ஆத்துமா வாழ்வதுபோல நான் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கச் செய்வீர் (3யோவான் 1:2) என்பதை நான் முழுமனதோடு விசுவாசிக்கிறேன்!

உங்கள் குடும்பத்துக்கான ஜெபக்குறிப்புகள்

நாள் 11

கணவன் மனைவி அர்ப்பணிப்பு ஜெபம்

(மாதம் ஒருமுறையாவது இந்த அர்ப்பணிப்பு ஜெபத்தை ஏறெடுங்கள்)

கணவர் மனைவி இருவரும் இணைந்து இந்த ஜெபத்தை ஏறெடுங்கள்

1. கர்த்தாவே! ஆதாம் தன் மனைவி ஏவாளை உள்ளபடியே ஏற்றுக்கொண்டது போல, நாங்களும் ஒருவரை ஒருவர் உள்ளபடி ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொடுக்கிறோம் (ஆதி 2:23).
2. தேவனே! எங்கள் வாழ்வில் முதலாவது உமக்கும், அடுத்து நாங்கள் ஒருவருக்கு ஒருவரும் முன்னுரிமைதர அர்ப்பணிக்கிறோம் (ஆதி 2:24)
3. ஆண்டவரே! முதலாவது உம்மையும், பின் நாங்கள் ஒருவரை ஒருவரும் பிரியப்படுத்த எங்களை ஒப்புக்கொடுக்கிறோம் (1கொரி 7:33)
4. கர்த்தாவே! நாங்கள் எந்த சூழ்நிலையிலும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாமல், எப்பொழும் சேர்ந்திருக்க அர்ப்பணிக்கிறோம். (1கொரி 7:5)

மனைவி கீழ்க்கண்ட அர்ப்பணிப்பு ஜெபத்தை ஏறெடுக்கவும்

5. தேவனே! உமக்கு நான் கீழ்ப்படிவதுபோல, நீர் எனக்குத் தந்த என் கணவருக்கும் கீழ்ப்படிய என்னை ஒப்புக்கொடுக்கிறேன் (எபே 5:22)
6. ஆண்டவரே! என் கணவரின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, ஆலோசனை தரும் ஒரு நல்ல தோழியாக இருக்க அர்ப்பணிக்கிறேன். (மல் 2:14)
7. கர்த்தாவே! ஒரு புத்தியுள்ள ஸ்திரீயாக, என் குடும்பத்தைக் கட்டவும், சிறப்பாக நிர்வகிக்கவும் என்னை ஒப்புக்கொடுக்கிறேன். (நீதி 31:27)

கணவர் கீழ்க்கண்ட அர்ப்பணிப்பு ஜெபத்தை ஏறெடுக்கவும்

8. தேவனே! நீர் சபையில் அன்புகூர்ந்து அதற்காக உம் ஜீவனையே தந்ததுபோல, நீர் தந்த என் மனைவியை நான் உயிருக்கு உயிராக நேசிக்க அர்ப்பணிக்கிறேன் (எபே 5:25)
9. ஆண்டவரே! என் மனைவி தவறுகள் செய்யும்போது அவளை கசந்து கொள்ளாமல், மென்மையாக நடத்த ஒப்புக்கொடுக்கிறேன் (கொலோ 3:19)
10. கர்த்தாவே, மனைவியின் பெலவீனங்களை நான் உணர்ந்து, அவள் பெலவீனத்தில் அவளுக்கு உதவி செய்யவும், பரிவு காட்டவும், அவளை கனப்படுத்தவும் என்னை அர்ப்பணிக்கிறேன். (1பேது 3:7)

நாள் 12

குடும்பத்தின் உலகப்பிரகாரத் தேவைகளுக்காக ஜெபியுங்கள்

1. உசிதமான கோதுமையினால் உன்னைத் திருப்தியாக்குகிறார் (சங் 147:14) என்ற வாக்குத்தத்தின்படி தேவன் எங்கள் குடும்பத்தை போஷிப்பீராக!
2. . . . காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? (மத் 6:30) என்ற வசனத்தின்படி எங்களை உடுத்துவிப்பீராக!
3. தேவன் தனிமையானவர்களுக்கு வீடுவாசல் ஏற்படுத்தி, கட்டுண்டவர்களை விடுதலையாக்குகிறார் . . . (சங் 68:6) என்ற வசனத்தின்படி எங்களுக்கு ஒரு சொந்த வீட்டைக் கட்டளையிடுவீராக!
4. எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்; மீதியான துணிக்கைகளைப் பன்னிரண்டு கூடைநிறைய எடுத்தார்கள் (மத் 14:20). அதுபோல எங்கள் வருமானத்தில் மீதம் எடுக்க கிருபை தருவீராக!
5. அறிவினாலே அறைகளில் அருமையும் இனிமையுமான சகலவிதப் பொருள்களும் நிறைந்திருக்கும் (நீதி 24:4) என்ற வாக்குத்தத்தத்தின்படி நல்ல பொருட்களால் எங்கள் இல்லத்தை நிரப்புவீராக!
6. கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார் (நீதி 10:22) என்ற வசனத்தின்படி வேதனையற்ற ஐசுவரியத்தை எங்களுக்கு அருளுவீராக!
7. அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் (சங் 1:3) என்ற வாக்குத்தத்தத்தின்படி எங்கள் வேலை, தொழில் வாய்க்க, வெற்றிபெற உதவி செய்வீராக!
8. உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும் (சங் 128:2) என்ற வசனத்தின்படி எங்கள் வருமானம் விரயமாகாமல், குடும்பத்தார் அதை சாப்பிட அநுக்கிரகம் செய்வீராக!
9. . . . நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன்கொடுப்பாய், நீயோ கடன் வாங்காதிருப்பாய் (உபா 28:12) என்ற வாக்குத்தத்தத்தின்படி எங்களை ஆசீர்வதித்து, கடனற்ற ஒரு வாழ்வை அருளுவீராக!
10. உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார் (உபா 28:1) என்ற வாக்குத்தத்தத்தின்படி தேவன் எங்கள் குடும்பத்தை மேன்மையாக வைப்பீராக!

நாள் 13

உங்கள் குடும்பத்தின் பொதுவான தேவைகளுக்காக ஜெபியுங்கள்

1. கர்த்தாவே! உம்முடைய பரிபூரண தெய்வீக சமாதானம் எங்கள் குடும்பத்தில் எப்பொழுதும் காணப்படுவதாக!

2. தேவனே! எங்கள் குடும்பம் எப்பொழுதும் உமக்கு முதலிடம் கொடுக்கும் குடும்பமாகக் காணப்பட கிருபை தாரும்!

3. குடும்பத்தில் நாங்கள் ஒருவரையொருவர் நேசிக்க, கனம்பண்ண, விட்டுக்கொடுக்க உதவி செய்யும்!

4. சந்தேகங்கள், தவறாக புரிந்துகொள்ளுதல் போன்றவை எங்கள் குடும்பத்தில் நுழைந்துவிடாதபடி காத்துக்கொள்ளும்!

5. எங்கள் குடும்பத்தில் அநுதினமும் தவறாமல் குடும்ப ஜெபம், தனி ஜெபம் மற்றும் வேத தியானங்கள் காணப்பட கிருபைதாரும்!

6. எங்கள் குடும்பத்தை எப்பொழுதும் தேவசமாதானம், தேவசந்தோஷம், மற்றும் தேவகிருபையால் நிரப்புவீராக!

7. பொருளாதார சாபங்கள் எங்கள் குடும்பத்தைவிட்டு விலகவும், கடன் பாரங்கள் நீங்கி, எங்கள் வருமானங்கள் ஆசீர்வதிக்கப்படவும் வேண்டுகிறோம்!

8. சபையிலும், சமுகத்திலும் எங்கள் குடும்பம் கிறிஸ்துவுக்கு நல்ல ஒரு சாட்சியாக வாழ அருள் செய்யும்!

9. எங்கள் குடும்பம் எப்பொழுதும் ஆவியில் நடக்கவும், தேவனோடுள்ள உறவில் செழித்திருக்கவும் உதவி செய்யும்!

10. யோசுவாவைப்போல நானும் எங்கள் வீட்டாரும் எங்கள் வாழ்நாள் முழுவதும், தலைமுறை தலைமுறையாக கர்த்தரையே சேவிக்க கிருபை தாரும்!

நாள் 14

உங்கள் குடும்பத்தின் ஆவிக்குரிய தேவைகளுக்காக ஜெபியுங்கள்

1. தேவனே! எங்கள் குடும்பம் வசனத்தின்மேல் தாகமாயிருந்து, விசுவாசத்தில் உறுதிப்பட கிருபை செய்வீராக!

2. எங்கள் குடும்பம் அனுதினமும் தவறாமல் வேதத்தை வாசித்து, தியானம் செய்ய ஆவியானவர் உணர்வுள்ள இதயத்தை தருவீராக!

3. கர்த்தாவே! எங்கள் குடும்பத்தின்மேல் ஜெப ஆவி ஊற்றப்பட, நாங்கள் ஆத்தும பாரத்தோடு அழிந்துபோகிற ஆத்துமாக்களுக்காக கதறி ஜெபிக்க உதவி செய்யும்!

4. ஆண்டவரே! எங்கள் குடும்பத்தினர் யாருவரும் தேவனுக்கு பயப்படவும், பாவத்தைவிட்டு விலகி ஓடவும் கிருபை தாரும்!

5. இயேசுவே! எங்கள் குடும்பத்தினர் எப்பொழுதும் ஆவியில் அனல் உள்ளவர்களாகவும், சாட்சியாகவும் வாழ அநுக்கிரகம் செய்யும்!

6. எங்கள் குடும்பத்தில் ஆத்துமபாரம் உண்டாக, எங்களுக்கு அறிமுகமான ஒவ்வொருவருக்கும் நாங்கள் சத்தியத்தை அறிவிக்க வழிகளைத் திறந்தருளும்!

7. தேவனே! எங்கள் குடும்பத்தினர் யாவரும் மற்றவர்களுக்கு முன் குற்றஞ்சாட்டப்படாத ஒரு வாழ்க்கை வாழ உதவி செய்யும்!

8. ஆண்டவரே! எங்கள் குடும்பம் கர்த்தருக்கும், சபைக்கும், சமுதாயத்திற்கும் முன்மாதிரியாகவும், உண்மையாகவும் இருக்க கிருபை தாரும்!

9. ஆவியானவரே! எங்கள் குடும்பம் கிறிஸ்துவைப் போன்ற சுபாவமுள்ளவர்களாகி, கனிதரும் விருட்சங்களாக வாழ அநுக்கிரகம் தாரும்!

10. கர்த்தாவே! எங்கள் குடும்பம் தேவனுடைய இராஜ்ஜியத்திற்காக ஊக்கமாய் விதைக்க, தேவ ஆசீர்வாதத்தை சுதந்தரிக்க உதவி செய்யும்!

நாள் 15

உங்கள் பிள்ளைகளின் ஆசீர்வாதத்துக்காக ஜெபியுங்கள்

1. இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன் (சங் 127:3) என்ற வாக்கின்படி நீர் தந்த சுதந்தரத்திற்காக நன்றி!

2. இயேசுவே! நீர் சிறுபிள்ளைகளை அணைத்துக்கொண்டு, அவர்கள் மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்ததுபோல (மாற் 10:16) எங்கள் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பீராக!

3. நீ இந்தப் பிள்ளையை எடுத்துக்கொண்டுபோய், அதை எனக்கு வளர்த்திடு, நான் உனக்குச் சம்பளம் கொடுக்கிறேன்... (யாத் 2:9) என்ற வாக்குத்தத்தத்தின்படி எங்கள் பிள்ளைகளை உமக்காக வளர்க்க எங்களை அர்ப்பணிக்கிறோம்!

4. பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக் கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக (எபே 6:4) என்ற கட்டளையின்படியே எங்கள் பிள்ளைகளை வளர்க்க கிருபை தாரும்!

5. குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர்... (மத் 21:16) என்ற வசனத்தின்படி எங்கள் பிள்ளைகள் உம்மை துதிக்கும் பிள்ளைகளாக வளர உதவி செய்யும்!

6. பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான் (நீதி 22:6) என்ற கட்டளையின்படி எங்கள் பிள்ளைகளுக்கு நாங்கள் முன்மாதிரியாக வாழ அநுக்கிரகம் செய்யும்!

7. அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் (மத் 18:10) என்ற வாக்கின்படி எங்கள் பிள்ளை களுக்காக தூதர்களை நியமித்திருப்பதற்காக ஸ்தோத்திரம்!

8. கர்த்தாவே! சாமுவேலைப் போல எங்கள் பிள்ளைகள் உம்முடைய குரலைக் கேட்கும் பாக்கியத்தைத் தருவீராக! (1சாமு 3:10)

9. இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார் (லூக் 2:52) என்ற வசனத்தின்படி எங்கள் பிள்ளைகள் நிறைவான வளர்ச்சியை அடைய கிருபை செய்வீராக!

10. நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும், இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய் (சங் 128:6) என்ற வாக்குத்தத்தத்தின்படி எங்கள் பேரப்பிள்ளைகளைக் காணும் பாக்கியத்தை எங்களுக்கு அருள்வீராக!

நாள் 16

உங்கள் குடும்பத்தில் உள்ள வாலிபர்களுக்காக ஜெபியுங்கள்

1. எங்கள் வாலிபப் பிள்ளைகள் வாஞ்சையாய் தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டுக் கீழ்ப்படியவும், கர்த்தருக்குள் வளரவும் உதவி செய்யும்!

2. எங்கள் பிள்ளைகள் தகப்பனையும். தாயையும் கனம்பண்ணி, தேவனுடைய நாமத்திற்கு மகிமையைக் கொண்டுவர கிருபை தாரும்!

3. எங்கள் வாலிபப் பிள்ளைகள் காலத்தை வீணாக்காமல் தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையையும், திறமைகளையும், ஞானத்தையும், வளர்க்கும் காரியங்களில் நேரத்தைப் பயன்படுத்த அநுக்கிரகம் தாரும்!

4. கர்த்தாவே! எங்கள் வாலிபர்கள் தேவனுக்குப் பயந்து, பாவங்களுக்கு விலகி ஓடுவதற்கான பெலனைத் தருவீராக!

5. தேவனே! எங்கள் பிள்ளைகள் போதைப் பழக்கங்கள், மற்றும் தீயப் பழக்க வழக்கங்களில் சிக்கிக்கொள்ளாதபடி அவர்களைக் காத்துக்கொள்ள

6. படிக்கும் எங்கள் வாலிபர்கள் பொழுதுபோக்கு காரியங்களில் அதிகம் நேரத்தை செலவிடாமல், எதிர்காலத்தைக் குறித்த அக்கரையுடன் தங்கள் படிப்பில் முழுகவனத்தையும் செலுத்த உதவி செய்யும்!

7. வேலைக்கு செல்லும் வாலிபர்கள் கருத்தாய் வேலையைக் கற்றுக்கொள்ளவும், தங்களோடு வேலைசெய்பவர்களுக்கு நல்ல முன்மாதிரியாக இருக்கவும், மூத்த அதிகாரிகளை மதித்து நடக்கவும் தேவன் கிருயையளிப்பீராக!

8. எங்கள் பிள்ளைகள் பிரயாணமாய் செல்லும்போது தேவன் அவர்களை ஆபத்து, விபத்து, நாசமோசங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வீராக!

9. எங்கள் பிள்ளைகள் ஒவ்வொரும் தைரியமாய் தங்கள் நண்பர்களுக்கு நற்செய்தி சொல்லி, அவர்களை கர்த்தருக்கு நேராக நடத்த பெலன் தருவீராக!

10. எங்கள் வாலிபப் பிள்ளைகள் ஒவ்வொருவரும் நல்ல துதிவீரர்களாகவும், ஜெபவீரர்களாவும் மாறும்படி பரிசுத்த ஆவியால் நிரப்புவீராக!

நாள் 17

உங்கள் வீட்டின் ஆசீர்வாதத்திற்காக ஜெபியுங்கள்

1. தேவன் தனிமையானவர்களுக்கு வீடுவாசல் ஏற்படுத்தி, கட்டுண்டவர்களை விடுதலையாக்குகிறார்... (சங் 68:6) என்ற வசனத்தின்படி எங்களுக்கு வீடுவாசலை ஏற்படுத்தித் தருவீராக!

2. கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா... (சங் 127:1) என்ற வாக்கின்படி எங்கள் வீடும் குடும்பமும் உம்மால் கட்டப்படுவதாக!

3. உன் தேவனாகிய கர்த்தர் உன்னை இரட்சிக்கவும், உன் சத்துருக்களை உனக்கு ஒப்புகொடுக்கவும், உன் பாளயத்திற்குள்ளே உலாவிக்கொண்டிருக்கிறார்... (உபா 23:14) என்ற வாக்குத்தத்தத்தின்படி எங்கள் வீட்டில் கர்த்தர் எப்போதும் உலாவுவீராக!

4. உன் அலங்கத்திற்குள்ளே சமாதானமும், உன் அரமனைகளுக்குள்ளே சுகமும் இருப்பதாக (சங் 122:7) என்ற வசனத்தின்படியே எங்கள் வீட்டில் உம் சமாதானம் நிறைவாகக் காணப்படுவதாக!

5. நீதிமான்களுடைய கூடாரங்களில் இரட்சிப்பின் கெம்பீரசத்தம் உண்டு; கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமஞ்செய்யும்... (சங் 118:15) என்ற வாக்கின்படி எங்கள் வீட்டில் எப்போதும் இரட்சிப்பின் மகிழ்ச்சி நிறைந்திருப்பதாக!

6. உம்முடைய ஆசீர்வாதத்தினாலே உமது அடியானின் வீடு என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதாக... (2சாமு 7:29) என்ற வாக்குத்தத்தத்தின்படி எங்கள் வீட்டை ஆசீர்வதிப்பீராக!

7. ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது (சங் 91:10) என்ற வசனத்தின்படி வியாதிகள் எங்கள் வீட்டை அணுகாதபடி பாதுகாப்பீராக!

8. நீர் யோபுவையும் அவன் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைக்கவில்லையோ? (யோபு 1:10) என்ற வாக்கின்படி எங்கள் வீட்டைச் சுற்றிலும் உம்முடைய பாதுகாப்பின் வேலை எப்போதும் காணப்படுவதாக!

9. அறிவினாலே அறைகளில் அருமையும் இனிமையுமான சகலவிதப் பொருள்களும் நிறைந்திருக்கும் (நீதி 24:4) என்ற வாக்குத்தத்தத்தின்படி எங்கள் வீட்டை இனிமையான பொருட்களால் நிரப்புவீராக!

10. நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்... (யோசு 24:15) என்ற வசனத்தின்படி எங்கள் குடும்பம் தலைமுறை தலையாக உம்மையே சேவிக்கும் பாக்கியத்தை அருள்வீராக!

நாள் 18

உங்கள் குடும்பத்தின் ஆசீர்வாதத்துக்காக மன்றாடுங்கள்

1. தேவனே! நாங்கள் குடும்பமாக தினமும் கூடி ஆவியில் ஜெபிக்க, உம்மிடமிருந்து தினமும் அற்புதங்களைப் பெற்றுக்கொள்ள கிருபை தாரும்!

2. கர்த்தாவே! அழிந்துபோகும் ஆத்துமாக்களைக் குறித்த பாரம் எங்களுக்கு உண்டாகி, நாங்கள் குடும்பமாக ஆத்துமஆதாயம் செய்பவர்களாக மாற வேண்டுகிறோம்!

3. நாங்கள் ஒருவரும் துணிகரமான பாவத்தில் விழுந்து தேவநாமத்திற்கு தூஷணத்தைக் கொண்டுவந்துவிடாமல், பரிசுத்த வாழ்க்கையில் அக்கினியாய் வாழ கிருபை தரும்படி மன்றாடுகிறோம்!

4. நாங்கள் குடும்பமாக தினமும் வேதத்தை வாசித்து, தேவனைக் குறித்த அறிவில் வளர வேண்டும் என்ற வாஞ்சையை எங்கள் ஒவ்வொருவருக்கும் தருவீராக!

5. ஆண்டவரே! எங்கள் குடும்பம் எப்பொழுதும் ஆவியானவரின் நிறைவான அபிஷேகத்தில் நிரம்பியிருக்க வேண்டுகிறோம்!

6. எங்கள் குடும்பத்தினருக்கு தேவன் ஏற்ற வேலைகளைத் தரும்படியாகவும், வேலையில் இரட்டிப்பான வருமானத்தைக் கட்டளையிடவும் மன்றாடுகிறோம்!

7. நாங்கள் கடனற்ற வாழ்வு வாழவும், தேவராஜ்ஜிய விரிவாக்கத்திற்குத் தாராளமாய் கொடுக்கிறவர்களாக மாறும்படியாகவும் தேவன் எங்கள் கைகளின் பிரயாசத்தை ஆசீர்வதித்து உயர்த்த ஜெபிக்கிறோம்!

8. எங்கள் குடும்பத்தில் சத்துருவின் கட்டுகள் அறுக்கப்படவும், எப்பொழுதும் நாங்கள் தேவசமாதானத்தால் நிறைந்திருக்கவும் வேண்டுகிறோம்!

9. எங்கள் பிள்ளைகள் விசுவாசத்தில் உறுதிப்பட, அவர்கள் உள்ளத்தில் தேவஅன்பு எப்போதும் நிறைந்தோட, சகவிசுவாசிகளிடத்தில் நாங்கள் எப்பொழுதும் சகோதர ஐக்கியத்தைக் காண்பிக்க மன்றாடுகிறோம்!

10. எங்கள் அன்றாட வாழ்வில் கிறிஸ்துவைப் போன்ற நல்ல சுபாவங்களை வெளிப்படுத்தி குடும்பமாக உம் நாமத்தை உயர்த்த எங்களுக்குக கிருபைதர பாரத்தோடு மன்றாடுகிறோம்!!

நாள் 19

உங்கள் துணைவர் / துணைவிக்காக ஜெபியுங்கள்

1. கர்த்தாவே! ஆதாம் ஏவாள் ஒருவரை ஒருவர் உள்ளபடி ஏற்றுக்கொண்டதுபோல நாங்களும் ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ள (ஆதி. 2:23) கிருபை தாரும்!

2. தேவனே! பல குறைபாடுகளின் மத்தியிலும் விசுவாசத்தோடு வாக்குத்தத்தத்தை சுதந்தரித்த ஆபிரகாம் சாராள்போல (ஆதி. 21:2) நாங்கள் விசுவாசத்தில் நடக்க அருள் செய்வீராக!

3. தேவனால் இணைக்கப்பட்ட ஈசாக்கு ரெபெக்காள் ஒருவரை ஒருவர் நேசித்தது போல (ஆதி. 24:67) நாங்களும் ஒருவரை ஒருவர் நேசிக்க உதவி செய்யும்!

4. தன் மனைவி ராகேலுக்காக 14 வருடங்கள் உழைத்த யாக்கோபைப்போல (ஆதி. 29:20) எங்கள் குடும்ப முன்னேற்றத்துக்காக நாங்கள் உழைக்க கிருபை செய்யும்!

5. தன் கடந்த காலத்தை மறந்து புதுவாழ்வைத் தொடங்கிய போவாஸ் ரூத்தைப்போல (ரூத் 4:10) கடந்த கால தோல்விகளை மறந்து புதுவாழ்வு வாழ அருள் செய்யும்!

6. அபிகாயில் தன் ஞானத்தால் தாவீது கொலைக்குற்றம் செய்வதை தடுத்ததுபோல (1சாமு. 25:23) நாங்கள் ஞானமாக ஒருவருக்கொருவர் நல்ல ஆலோசனை களைக் கொடுத்துக்கொள்ள உதவி செய்யும்!

7. துரோகம் செய்த கோமேரை ஓசியா தீர்க்கதரிசி மன்னித்து ஏற்றுக்கொண்டது போல (ஓசியா 3:1) நாங்களும் ஒருவருக்கொருவர் மன்னிக்க கிருபை தாரும்!

8. எஸ்தர் தன் கணவர் ஆகாஸ்வேரு ராஜா உதவியோடு யூதகுலத்தைக் காப்பாற் றியதுபோல (எஸ். 8:10) நாங்கள் பிறருக்கு உதவி செய்ய அருள் செய்யும்!

9. யோசேப்பு தேவசித்தத்திற்கு கீழ்ப்படிந்து மரியாளை ஏற்றுக்கொண்டதுபோல (மத். 1:24) நாங்கள் தேவசித்தம் அறிந்து செயல்பட உதவி செய்யும்!

10. ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் பவுலுக்கு உதவியாக இருந்ததுபோல (அப். 18:18) நாங்கள் எங்கள் ஊழியருக்கும், சபைக்கும் ஆதரவாக இருக்க கிருபை தாரும்!

உங்கள் பெற்றோருக்காக ஜெபியுங்கள்

1. கர்த்தாவே! இந்த பூமியில் நான் மனிதனாகப் பிறப்பதற்கு கருவியாக இருந்த என் தாய் தகப்பனை ஆசீர்வதிப்பீராக!

2. என்னை வளர்த்து ஆளாக்க என் பெற்றோர் செய்த தியாகங்களை நான் மறந்துவிடாதபடி நன்றியுள்ள இதயத்தை எனக்குத் தாரும்!

3. உம் கட்டளையின்படி என் பெற்றோரை நான் கனம்பண்ண எனக்கு ஞானத்தையும், கிருபையையும் தருவீராக!

4. வயதான காலத்தில் பெற்றோரைப் போஷித்துக் காப்பாற்றும் பெலனையும் வருமானத்தையும் கிருபையாக எனக்குத் தருவீராக!

5. வயதான காலத்தில் என் பெற்றோருக்கு வியாதிகள் வராதபடி, நல்ல உடல் ஆரோக்கியத்தைத் தந்து அவர்களை ஆசீர்வதிப்பீராக!

6. என் பெற்றோர்கள் அன்பாகத் தரும் ஆலோசனைகளை அலட்சியம் செய்யாமல் அவைகளைக் கருத்தில்கொள்ள எனக்கு உதவி செய்யும்!

7. (பெற்றோர் இரட்சிக்கப்படாதிருந்தால்) தேவனே! இரட்சிக்கப்படாத என் பெற்றோரை இரட்சிப்பீராக! (இரட்சிக்கப்பட்டிருந்தால்) எனக்கு சத்தியத்தைப் போதித்து வழிநடத்திய என் பெற்றோரை ஆசீர்வதிப்பீராக!

8. என் பெற்றோர்மூலமாக நீர் எனக்குக் கொடுத்த என் இரத்த சம்பந்தமான உறவுகள் அனைவரையும் இரட்சிப்பீராக!

9. தேவனே! என் பெற்றோர்களுடைய நாட்களுக்குத் தக்கதாக ஒவ்வொரு நாளும் அவர்களுடைய பெலனைக் கூட்டிக் கொடுப்பீராக!

10. கர்த்தாவே! என் பெற்றோர் செய்த நன்மைகளுக்குப் பதிலாக இரண்டு மடங்கு நன்மைகளை நான் அவர்களுக்குச் செய்ய அநுக்கிரகம் செய்யும்!

உங்கள் சபைக்கான ஜெபக்குறிப்புகள்



நாள் 21

உங்கள் ஊழியருக்காக ஜெபியுங்கள்

1. ஆண்டவரே! எங்கள் ஊழியருக்கு நீர் கொடுத்த தரிசனத்தையும் இலக்கையும் நோக்கி அவர் தொடர்ந்து ஓட பெலன் தருவீராக (பிலி. 3:16)

2. பிதாவே! எங்கள் ஊழியருக்கு விரோதமாக எழும்பும் மனித சக்திகளையும், அந்தகார வல்லமைகளையும் நிர்மூலமாக்குவீராக. (ஏசாயா 54:17)

3. தேவனே! எங்கள் ஊழியரின் பிரயாணத்தில் கர்த்தருடைய தூதனை உடன் அனுப்பி பாதுகாப்பீராக (அப். 5:19)

4. ராஜாவே! 128ம் சங்கீதத்தின்படி எங்கள் ஊழியரின் மனைவி, பிள்ளைகளை தேவரீர் சீயோனிலிருந்து ஆசீர்வதிப்பீராக.

5. ஆவியானவரே! எங்கள் ஊழியரை உம் வல்லமையால் நிரப்பி, அவரைக் கொண்டு அசுத்தஆவிகளைத் துரத்துவீராக. (அப் 8:7)

6. இயேசுவே! எங்கள் ஊழியர் வியாதியஸ்தர்கள்மேல் கைகளை வைக்கும்போது அவர்களை சுகமாக்குவீராக (மாற்கு 16:18)

7. கர்த்தாவே! எங்கள் ஊழியர் மனப்பூர்வமாகவும், உற்சாகமாகவும், முன்மாதிரியாகவும் ஊழியம் செய்ய கிருபை தருவீராக (1பேதுரு 5:2-3)

8. தகப்பனே! எங்கள் ஊழியர் பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலின்படியும், தேவ சித்தத்தின்படியும் சபையை நடத்த உதவிசெய்வீராக (அப் 20:28)

9. ஞானத்தின் உறைவிடமே! எங்கள் ஊழியர் சத்திய வசனத்தை நிதானமாகப் பகுத்து, தைரியத்தோடு போதிக்க ஞானம் தருவீராக (2தீமோ. 2:15, அப் 4:30)

10. தேற்றரவாளரே! எங்கள் ஊழியர் பிரசங்கிக்கும்போதே, கேட்கும் எல்லோர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கி வல்லமையாக கிரியை நடப்பிப்பீராக (அப். 10:44)

நாள் 22

உங்கள் சபையிலுள்ள விசுவாசிகளுக்காக ஜெபியுங்கள்

1. அறுப்புக்கு எஜமானனே! உமது அறுப்புக்கு எங்கள் விசுவாசிகளை பாரப்படுத்தி அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்கிறோம் (மத் 9:38).

2. பரிசுத்த பிதாவே, விசுவாசிகள் எப்பொழுதும் ஒற்றுமையாக இருக்கும்படிக்கு, உம்முடைய நாமத்தினாலே அவர்களை காத்துக்கொள்ளும் (யோவா 17:11).

3. தேவனே! விசுவாசிகள் உம்முடைய சந்தோஷத்தை நிறைவாக அடையவும், அவர்கள் துக்கம் சந்தோஷமாக மாறவும் ஜெபிக்கிறோம் (யோவா 17:13).

4. கர்த்தாவே! சத்துருவின் எல்லாத் தீமையினின்றும் விசுவாசிகளை இரட்சித்துப் பாதுகாக்க வேண்டிக்கொள்ளுகிறோம் (யோவா 17:15).

5. இயேசுவே! உம்முடைய சத்திய வசனத்தினாலே எங்கள் சபை விசுவாசிகளை வேறுபிரித்துப் பரிசுத்தமாக்கும்படி மன்றாடுகிறோம் (யோவா 17:17).

6. பிதாவே! நீர் இயேசுவிலும் அவர் உம்மிலும் இருப்பதுபோல, நாங்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம் (யோவா 17:21).

7. ஆண்டவரே! விசுவாசிகள் யாவரும் ஒன்றாயிருப்பதைக் கண்டு உலகம் இயேசுவை விசுவாசிக்க அருள் செய்யும் (யோவா 17:22).

8. பிதாவே, கிறிஸ்துவின் பிரசன்னம் கிரியை செய்யும் இடத்தில் விசுவாசிகள் உம்முடனே இருக்க கிரியை செய்யும் (யோவா 17:24).

9. ஆவியானவரே! விசுவாசக் குடும்பத்தில் இரட்சிக்கப்படாதவர்களின் மனதை சத்துருவானவன் குருடாக்காதபடி காத்துக்கொள்ளும் (2கொரி 4:4).

10. தேவனே! விசுவாசக் குடும்பத்தில் எதிர்த்து நிற்பவர்கள் சத்தியத்தை அறியும்படி அவர்களுக்கு மனந்திரும்புதலை அருள மன்றாடுகிறோம் (2தீமோ 2:25).

நாள் 23

உங்கள் சபையாகிய குடும்பத்திற்காக ஜெபியுங்கள்

1. கர்த்தாவே, எங்கள் சபை பரிசுத்த ஆவியானவராலே நிரப்பப்பட்டு, ஆவியில் அனலுள்ள சபையாக மாற கிருபை செய்யும் (அப் 2:4).

2. பரிசுத்தரே! சபைக்கு புதிதாக வருபவர்கள் யாவரும் மனம்திரும்பி, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள உதவி செடீநுயும் (அப் 2:38).

3. தேற்றரவாளரே! சபை அப்போஸ்தல அஸ்திபார போதனைகளில் வளர்ந்து, பக்தி விருத்தி அடைய ஜெபிக்கிறோம் (அப் 2:42).

4. ஆண்டவரே! சபையார் கர்த்தருடைய பந்தியில் உறுதியாகத் தரித்திருந்து, சகோதர ஐக்கியத்தைக் காத்துக்கொள்ள வேண்டிக்கொள்கிறோம்.(அப் 2:42).

5. தேவனே! எங்கள் ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடு சொல்லும்படி அவருக்கு உதவி செய்தருளும் (அப். 4:30).

6. ஆவியானவரே! ஆதி விசுவாசிகள் ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்ததுபோல எங்கள் சபை ஜெபிக்கும்போது, உம் வல்லமையை வெளிப்படுத்தும் (அப் 4:31).

7. ராஜாவே! தேவவசனம் அதிகமாகப் பரவி, சீடருடைய எண்ணிக்கை எருசலேமில் மிகவும் பெருகியதுபோல எங்கள் சபையும் பெருக உதவி செய்யும் (அப் 6:7).

8. தகப்பனே! எங்கள் ஊழியர் கைகளினாலே அதிசயங்களும் அற்புதங்களும் நடக்கும்படிச் செய்து, நோயாளிகளைக் குணமாக்கும் (அப் 4:40, 5:12).

9. இயேசுவே! சிதறிப்போனவர்கள் எங்கும் சுற்றித்திரிந்து நற்செய்தியைப் போதித்ததுபோல, எங்கள் சபையும் தீவிரமாக சுவிசேஷத்தை அறிவிக்க ஆத்தும பாரத்தைத் தாரும் (அப் 8:4).

நாள் 24

உங்கள் சபையின் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக ஜெபியுங்கள்

1. கர்த்தாவே, இரட்சிக்கப்படுகிறவர்களை அநுதினமும் எங்கள் சபையில் சேர்க்கும்படியாக ஜெபிக்கிறோம்!

2. தேவனே, எங்கள் சபை ஆவியோடும் உண்மையோடும் உம்மை ஆராதனை செய்கிற சபையாகக் காணப்பட கிருபை தாரும்!

3. எங்கள் சபை பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட, ஆவியானவரின் கிரியைகள் வல்லமையாய் வெளிப்பட அநுக்கிரகம் செய்யும்!

4. எங்கள் சபை ஜெபத்திலும், ஊழியத்திலும் ஒரு முன்மாதிரி சபையாக மாற உதவி செய்யும்படி ஜெபிக்கிறோம்!

5. ஆண்டவரே! எங்கள் சபை ஆவிக்குரிய வாழ்வில் ஜெயம்கொள்கிற சபையாகக் காணப்பட கிருபை தாரும்!

6. தேவனே! எங்கள் சபை பரிசுத்தமுள்ள சபையாகவும், தேவசித்தத்தை நிறைவேற்றுகிற சபையாகவும் காணப்பட அநுக்கிரகம் தாரும்!

7. ஆவியானவரே! எங்கள் சபையில் பிசாசுகள் ஓட, வியாதியஸ்தர்கள் சுகமடைய, அற்புத அடையாளங்கள் ஒவ்வொரு நாளும் நடைபெற கிரியை செய்வீராக!

8. இயேசுவே! எங்கள் சபையில் விசுவாசிகள் யாவருக்குள்ளும் ஒருமனம், ஒற்றுமை, ஐக்கியம் உண்டாக ஜெபிக்கிறோம்!

9. ஆண்டவரே! எங்கள் சபை கர்த்தருக்கு பயப்படும் பயத்தில் வளர்ந்து பெருக நீர் உதவி செய்வீராக!

10. பிதாவே! எங்கள் சபை உம் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு எப்பொழுதும் ஆயத்தமாக இருக்க கிருபை செய்வீராக!

நாள் 25

உங்கள் சபையாருக்காக ஜெபியுங்கள்

1. தேவனே! புதிதாக எங்கள் சபைக்கு வரும் விசுவாசிகள், இரட்சிக்கப்பட, ஞானஸ்நானத்தின் மூலம் உம்மோடு உடன்படிக்கை செய்ய கிருபை தாரும்!

2. கர்த்தாவே! எங்கள சபையார் யாவரும் அவிசுவாசிகள் மத்தியில் நற்சாட்சி உள்ளவர்களாய் வாழ, உம் நாமத்தை மகிமைப்படுத்த உதவி செய்யும்!

3. இயேசுவே! எங்கள் சபையார் யாவரும் நீர் தங்களுக்குத் தந்த வரங்களைப் பயன்படுத்தி ஆத்துமாக்களை உம்மிடம் வழிநடத்த அநுக்கிரகம் செய்யும்!

4. ஆண்டவரே! எங்கள் சபையார் உமக்காக தங்கள் நேரத்தையும், பெலனையும் செலவிடவும், ஊழியத்தை தாங்கவும், தேவராஜ்யத்தை கட்டவும் பெலன் தாரும்!

5. ஆவியானவரே! எங்கள் சபையார் யாவரும் ஜெபஆவியினால் நிரப்பி, அழிந்துபோகும் ஆத்துமாக்களுக்காக பாரத்தோடு ஜெபிக்க கிருபை தாரும்!

6. தேவனே! சபையாருக்குள் ஒருவரை ஒருவர் மன்னிக்கிற குணமும், ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கிற சகோதர ஐக்கியமும் காணப்பட உதவி செய்யும்!

7. கர்த்தாவே! விசுவாசக் குடும்பங்களில் இன்னும் இரட்சிக்கப்படாத குடும்ப நபர்கள் இரட்சிக்கப்படும்படி அவர்கள் மனக்கண்களை திறந்தருளுவீராக!

8. ஆண்டவரே! எங்கள் சபையில் குடும்பத்திற்கு ஒரு ஊழியர் எழும்பி, உம் நாம மகிமைக்காக ஊழியம் செய்ய அநுக்கிரகம் செய்யும்!

9. இயேசுவே! எங்கள் சபையாரை பொருளாதாரத்தில் ஆசீர்வதித்து, சபையின் ஊழியங்களை உதாரத்துவமாய் தாங்க கிருபை செய்வீராக!

10. ஆண்டவரே! எங்கள் சபையின் இடத்தேவைகள், ஆலயக் கட்டுமானப் பணித் தேவைகள் யாவற்றையும் எங்கள் விசுவாசிகள் மூலமாக அற்புமாக சந்திப்பீராக!

நாள் 26

உங்கள் சபையின் ஞாயிறு ஆராதனைக்காக ஜெபியுங்கள்

1. கர்த்தாவே! ஆயத்தநாளாகிய சனிக்கிழமையே விசுவாசிகள் ஆராதனைக்குரிய ஆயத்தங்களைச் செய்யும்படி அவர்கள் இருதயத்தை ஏவுவீராக! (மாற்கு 15:42)

2. ஆண்டவரே! விசுவாசிகள் துதியோடு சபைக்குள் நுழைந்து, மனதார உமக்கு நன்றி செலுத்தும்படி நன்றியுள்ள இதயத்தை தருவீராக! (சங் 100:4)

3. ஆவியானவரே! பாடல் வேளையில் விசுவாசிகள் ஆவியோடும், கருத்தோடும் பாடி தேவனை மகிமைப்படுத்த உதவி செய்வீராக! (1கொரி. 14:15)

4. தேற்றரவாளரே! ஜெபவேளையில் யாவரும் ஆவியோடும், கருத்தோடும் விண்ணப்பம் செய்ய கிருபை தாரும். (1கொரி 14:15)

5. இயேசுவே! சபை கூடிவருகிறதை விசுவாசிகள் விட்டுவிடாமல், குடும்பமாக வந்து ஆராதிக்க உற்சாகத்தின் ஆவியைத் தர வேண்டுகிறோம். (எபி 10:25)

6. தகப்பனே! ஒருவரும் கர்த்தருடைய சந்நிதியில் வெறுங்கையோடே வராமல், அவரவர் தகுதிக்கு ஏற்றபடி காணிக்கையைக் கொண்டுவர உற்சாகம் தரும்படி மன்றாடுகிறோம். (உபா. 16:17)

7. பரிசுத்தரே! விசுவாசிகள் ஆவியான தேவனை ஆவியோடும். உண்மையோடும் ஆராதிக்கும்படி அவர்கள் இருதயத்தை பக்குவப்படுத்துவீராக! (யோவான் 4:24)

8. ராஜாவே! எங்கள் ஊழியரின் பிரசங்கம் மக்களை தேறினவர்களாகவும், எந்த நல்ல செயல்களையும் செய்யத் தகுதியுள்ளவர்களாவும் மாற்றும்படியாக வேண்டுகிறோம். (2தீமோ. 3:16)

9. தேவனே! விசுவாசிகள் திருவசனத்தைக் கேட்கிறவர்களாக மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாகவும் மாறி, தேவ ஆசீர்வாதத்தை சுதந்தரிக்க மன்றாடுகிறோம். (யாக் 1:22)

10. பிதாவே! ஆராதனையில் ஆவியானவர் வெளிப்பட்டு, மக்கள் பக்திவிருத்தி அடையவும், ஆவியில் பெலனும் அடையவும் கிருபை தாரும் (1கொரி. 14:24-26)

நாள் 27

உங்கள் சபை ஒரு எழுப்புதல் மையமாக மாற ஜெபியுங்கள்

1. தேவனே! எங்கள் சபையின் ஒவ்வொரு ஆராதனையும் எழுப்புதல் கூட்டமாக மாறத் தக்கதாக உம் ஆவியைப் பொழிவீராக!

2. ஆண்டவரே! பாடல், ஆராதனை நேரம் யாவரையும் கர்த்தரண்டை கிட்டி சேர்க்கும்படி உம் பிரசன்னத்தை நிறைவாக அருள்வீராக!

3. கர்த்தாவே! எங்கள் ஊழியரிடம் இருந்து தேவசெய்தி முழு வல்லமையோடு புறப்பட்டு வர, மக்களின் இதயம் தொடப்பட கிருபை தாரும்!

4. ஆவியானவரே! செய்திக்கேற்ற அழைப்புக் கொடுக்கப்படும்போது பாவிகள் கண்ணீருடன் கதறி தங்களை அர்ப்பணிக்க அநுக்கிரகம் செய்யும்!

5. இயேசுவே! ஆராதனையில் வியாதியஸ்தர் தெய்வீக வல்லமையினால் தொடப்பட, அற்புத சுகம் பெற உதவி செய்யும்!

6. தேவனே! பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெறாதவர்கள் ஆராதனை வேளையில் ஆவியின் அபிஷேகத்தால் வல்லமையாய் நிரப்புவீராக!

7. ஆண்டவரே! பிசாசின் பிடியில் கட்டுண்டோர் நாங்கள் ஆராதிக்கும்போதே விடுதலை அடையும்படி கிருபை தருவீராக!

8. இயேசுவே, ஆராதனையில் ஏறெடுக்கப்படும் விண்ணப்பங்களுக்கு தேவன் வல்லமையாக பதில் தந்தார் என்று அநேகர் சாட்சி பகர உதவி செய்யும்!

9. ஒரு ஆராதனை முடிவதற்குள்ளாகவே மக்கள் அடுத்த ஆராதனைக்கு காத்து நிற்கத்தக்கதாய் புதிய ஆத்துமாக்களை எங்கள் சபையில் சேர்ப்பீராக!

10. எங்கள் சபையார் யாவரும் எழும்பி நற்செய்தி அறிவித்து சபையைச் சுற்றியுள்ள பகுதிகளில் எல்லாம் திருச்சபைகள் நிறுவப்படத் தக்கதாக, ஒரு எழுப்புதலைத் தருவீராக!

நாள் 28

தேசத்திற்காகவும், ஊழியர்களுக்காகவும் பத்துவிரல் ஜெபம்

இடதுகரத்திலுள்ள விரல்களைக் கொண்டு சமுதாயத்திற்காக ஜெபிப்போம்:

1. **பெருவிரல்:** ஜெபிக்கக் கைகூப்பும்போது உங்களுக்கு நெருக்கமாக இருப்பது பெருவிரலே. எனவே உங்களுக்கு நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் பெயரைச் சொல்லி முதலாவது ஜெபியுங்கள்.
2. **சுட்டுவிரல்:** இது சுட்டிகாட்டும் விரல், உங்களுக்கு போதிக்கும் ஆசிரியர்கள், உங்கள் உடல் நிலையை சுட்டிகாட்டி வழிகாட்டும் மருத்துவர்களுக்காக ஜெபியுங்கள்.
3. **நடுவிரல்:** எல்லாவற்றிலும் உயரமான விரலாகிய இது நமக்கு மேலான அதிகாரமுள்ள யாவரையும் குறிக்கிறது. எனவே, நமது ஜனாதிபதி, பிரதம மந்திரி, முதலமைச்சர், பிற அதிகாரிகள் இவர்களுக்காக ஜெபியுங்கள்.
4. **மோதிரவிரல்:** இது அன்பின் விரல். நீங்கள் நேசிக்கும் உங்கள் குடும்பத்தின ருக்காகவும், உங்கள் தனிப்பட்ட தேவைகளுக்காகவும் ஜெபியுங்கள்.
5. **சுண்டுவிரல்:** கடைசி விரலாகிய இது பெலவீனமான விரல், நமது சமுதாயத்தில் பெலவீனமானவர், வியாதியில் இருப்பவர்கள், கஷ்டத்தில் இருப்பவர்களை நினைத்து ஜெபியுங்கள்.

வலதுகரத்திலுள்ள விரல்களைக் கொண்டு ஊழியர்களுக்காக ஜெபிப்போம்:

1. **பெருவிரல்:** இது முதல் விரலாக இருப்பதால், பிரதான ஊழியமாகிய புதிய சபைகளை ஸ்தாபிக்கும் அப்போஸ்தலர்களுக்காகவும் (எபேசியர் 4:12-13), மிஷனரிகளுக்காகவும் ஜெபியுங்கள்.
2. **சுட்டுவிரல்:** நீ செய்வது தவறு என்று ஒருவரை சுட்டி காட்டித் திருத்தும் ஊழியத்தை செய்யும் தீர்க்கதரிசிகளுக்காக ஜெபியுங்கள்.
3. **நடுவிரல்:** இது நீளமான விரல். நீண்ட தூரம் பிரயாணம்செய்து நற்செய்தி அறிவிக்கும் சுவிசேஷகர்களை நினைவில் கொண்டு ஜெபியுங்கள்.
4. **மோதிரவிரல்:** இது அன்பிற்கு அடையாளமாகிய விரல்: அன்போடு சபையை மேய்த்து, போஷிக்கும் பாஸ்டர்களை நினைத்து ஜெபியுங்கள்.
5. **சுண்டுவிரல்:** சிறிய விரலாகிய இது எளிதில் நம் காதிற்குள் செல்வதுபோல, வேதபோதனைகளை நம் இதயத்திற்குள் செலுத்தும் போதகர்களை, வேதாகமக் கல்லூரி ஆசிரியர்களை நினைத்து ஜெபியுங்கள்.

நாள் 29

விசுவாசக் குடும்பங்களின் அத்தியாவசிய தேவைகளுக்காக ஜெபியுங்கள்

1. தேவனே! எங்கள் சபை விசுவாசக் குடும்பங்களில் வியாதியோடு இருப்பவர்களை தெய்வீக சுகத்தினால் நிரப்பும்படி வேண்டுகிறோம்!

2. கர்த்தாவே! எங்கள் சபை விசுவாசக் குடும்பங்கள் பொருளாதாரத்தில் செழிக்க, நல்ல வேலை, தொழில், ஏற்ற வருமானத்தை தேவன் கட்டளையிடுவீராக!

3. எங்கள் சபையில் கடன் பிரச்சனையோடு இருக்கும் குடும்பங்களுக்கு தேவன் அற்புத விடுதலை கொடுக்க ஜெபிக்கிறோம்!

4. எங்கள் சபை விசுவாசிகளின் பிள்ளைகள் கர்த்தருக்கேற்ற போதனையிலும், சிட்சையிலும் வளர்க்கப்பட அருள் செய்வீராக!

5. படிக்கிற விசுவாச மாணவர்களுக்கு தேவன் பரலோக ஞானத்தைத் தந்து அவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெற ஆசீர்வதிக்க வேண்டுகிறோம்!

6. சபையில் படித்து முடித்த வாலிபர்களுக்கு ஏற்ற வேலை வாய்ப்புகளை ஆண்டவர் உண்டாக்கித்தர பாரத்தோடு மன்றாடுகிறோம்!

7. ஏற்ற வயதும், குடும்பம் நடத்த ஏற்ற வருமானமும் உள்ள வாலிபர்களுக்கு நல்ல மணவாழ்வை கர்த்தர் அருள ஜெபிக்கிறோம்!

8. திருமணமாகி புத்திர பாக்கியத்திற்காக ஜெபித்துக்கொண்டிருக்கும் தம்பதிகளுக்கு இவ்வருடத்தில் தேவன் மாபெரும் அற்புதம் செய்ய வேண்டுகிறோம்!

9. பிரச்சனைகளாலும், கருத்து வேறுபாடுகளாலும், பெரியவர்களின் சுயநலத்தாலும் பிரிந்து போயிருக்கின்ற குடும்பங்கள் ஒன்று சேர, ஆண்டவர் வழிகளைத் திறக்க வேண்டுகிறோம்!

10. விசுவாசிகளின் குடும்பத்தில் இன்னும் இரட்சிக்கப்படாமல் இருப்பவர்களுக்கு எங்கள் சபை விசுவாசிகள் நல்ல முன்மாதிரிகளாக வாழவும், கிறிஸ்துவின் அன்போடு அவர்களை இரட்சிப்புக்குள் நடத்த தேவன் கிருபை தருவீராக!

நாள் 30

உங்களை சுற்றியுள்ள மக்களுக்காக ஜெபியுங்கள்

1. தேவனே! நான் வசிக்கும் ஊர் மக்கள் சத்தியத்தை அறிந்துகொள்ளும்படி அவர்களுக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைத் தருவீராக!

2. தேவனே! பலமுறை சுவிசேஷத்தைக் கேட்டும் அதை ஏற்றுக்கொள்ள முடியாதபடி குருடாக்கப்பட்டிருக்கும் மக்கள் மனக்கண்களை திறந்தருள ஜெபிக்கிறோம்!

3. தங்கள் மார்க்கத்தைக் குறித்து திருப்தியற்று வாழும் மக்கள், இயேசுவே வழி என்பதை அறிந்து, கிறிஸ்துவிடம் ஓடிவர ஜெபிக்கிறோம்!

4. எங்களைச் சுற்றியுள்ள மக்கள் ஜாதிக்கட்டுகள், சமுதாயக் கட்டுகளிலிருந்து விடுபட்டு, கிறிஸ்துவுக்குள் சகோதர சகோதரிகளாக வாழ ஜெபிக்கிறோம்!

5. கர்த்தாவே! எங்கள் பகுதியில் பிசாசு மற்றும் மந்திரவாதக் கட்டுகளில் இருக்கும் மக்களை நீர் விடுவித்து மீட்கும்படி ஊக்கமாய் ஜெபிக்கிறோம்!

6. பக்தி நிறைந்த எங்கள் மக்களுக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் சொப்பனங்கள், தரிசனங்கள் மூலமாக உம் வல்லமையை வெளிப்படுத்த மன்றாடுகிறோம்!

7. எங்களைச் சுற்றி வாழும் மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க ஏற்ற வாய்ப்புகளை எங்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க பாரத்தோடு மன்றாடுகிறோம்!

8. தலைமுறை சாபத்தில் சிக்குண்டு வேதனைப்படும் மக்கள் கல்வாரி சிலுவையில் கிறிஸ்து சிந்திய இரத்தத்தால் ஆசீர்வதிக்கப்பட ஜெபிக்கிறோம்!

9. வாழ வழிதெரியாமல் தற்கொலைதான் வழி என்று வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் மக்கள் கிறிஸ்துவிடம் வந்து புதுவாழ்வைப் பெற்றுக்கொள்ள மன்றாடுகிறோம்!

10. விபத்துகள்மூலமாக உயிர்களைப் பலிவாங்கும் சத்துருவின் கிரியைகள் முறிக்கப்பட்டு, மக்கள் கிறிஸ்து அருளும் ஜீவனைப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்!

நம் இந்திய தேசத்துக்கான ஜெபக்குறிப்புகள்

நாள் 31

தோமா இரத்தம் சிந்திய சென்னைக்காக ஜெபிப்போம்

1. தேவனே! சென்னையில் ஊழியம் செய்யும் 5000 – க்கும் அதிகமான முழுநேர ஊழியர்கள் முன்மாதிரியான வாழ்க்கை வாழ, சத்தியத்தை தைரியமாய் போதிக்க மன்றாடி ஜெபிக்கிறோம்!

2. சென்னையில் பிச்சையெடுக்கும் தொழில் செய்பவர்கள் யாவரையும் அரசாங்கம் மீட்டு, அவர்களுக்கு மறுவாழ்வு ஏற்படுத்தித்தர ஜெபிக்கிறோம்!

3. சென்னையில் குடிசை மற்றும் சேரிப்பகுதிகளில் வசிக்கும் சுமார் பத்து இலட்சத்திற்கும் மேற்பட்டோர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளவும், இவர்கள் வாழ்க்கைத் தரம் மேம்படுத்தப்படவும் வேண்டுகிறோம்!

4. சென்னையில் ஆண்டிற்கு சுமார் 1084 தற்கொலைகள் நடைபெறுகின்றன. இந்த தற்கொலையின் ஆவிகளை கர்த்தர் அதம்பண்ண ஜெபிக்கிறோம்!

5. சென்னையில் தெரு ஓரத்தில் வாழும் சிறுவர்களில் 71 சதவீதம் பேர் தங்கள் வாழ்க்கைத் தரம் மாறவேண்டும் என்று ஆசைப்படுகின்றனர். கர்த்தர் இவர்களுக்கு ஒரு புதுவாழ்வைத் தர ஜெபிக்கிறோம்.

6. சென்னையில் விபச்சாரத் தொழில் ஈடுபட்டுள்ள சுமார் 5,000 க்கும் மேற்பட்டப் பெண்கள் மனந்திரும்ப, அரசாங்கம் இவர்களுக்கு ஒரு மறுவாழ்வை ஏற்படுத்தித்தர கர்த்தர் கிரியை செய்யும்படி மன்றாடுகிறோம்.

7. இந்தியாவிலேயே சென்னையில்தான் பெண்களுக்கெதிரான குற்றங்கள் மிக அதிகளவில் நடைபெறுவதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. கர்த்தாவே! இந்நிலைமாற பாரத்தோடு வேண்டுகிறோம்.

8. அதிகமாகப் பெருகிவரும் வாகனங்களால் சென்னையில் ஏற்படும் விபத்துக்கள் மற்றும் உயிரிழப்புகள் மாறும்படி ஜெபிக்கிறோம்.

9. இளைஞர்கள் மத்தியில் வேகமாக பரவிவரும் போதைப் பழக்கங்கள் மாறவும், அவர்கள் யாவரும் கிறிஸ்துவிடம் திரும்பவும் மன்றாடுகிறோம்!

10. அப்போஸ்தலர் தோமா இரத்தம் சிந்தி மரித்த சென்னைப் பட்டணம் ஒரு மாபெரும் எழுப்புதலைக் காணும்படியாக மன்றாடி ஜெபிக்கிறோம்.

நம் தமிழ்நாட்டின் இரட்சிப்புக்காக ஜெபிப்போம்

1. தமிழகத்தில் சராசரியாக தினமும் ஒரு பெண் வரதட்சணைக் கொடுமையால் கொல்லப்படுகிறாள். வரதட்சணை முறை மாறுவதற்கு அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க ஜெபிக்கிறோம்!

2. அரக்கோணம் பகுதிகளில் பெண்களை கட்டாய விபச்சாரத்தில் ஈடுபடுத்தும் தேவதாசி முறை இன்னும் நடைமுறையில் உள்ளது. இக்கொடிய பழக்கத்தை அரசாங்கம் முற்றிலும் தடைசெய்ய ஜெபிக்கிறோம்!

3. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிகபட்சமாக, ஆண்டுக்கு சுமார் ஒரு இலட்சம் பெண்கள் கருக்கலைப்பு செய்கின்றனர். இப்பாவம் தடுத்து நிறுத்தப்பட மன்றாடி ஜெபிக்கிறோம்!

4. தமிழகத்தில் புகைப்பழக்கத்திற்கும், போதைப்பழக்கத்திற்கும் அடிமையாகியுள்ள 30 சதவீத இளைஞர்களை தேவன் விடுவிக்கும்படி ஜெபிக்கிறோம்!

5. சிறுபெண்களை கடத்திச் சென்று விபச்சாரத் தொழிலில் ஈடுபடவைப்பதில் தமிழகம் முன்னணியில் உள்ளது. இப்பிள்ளைகள் மீட்கப்படவும், இக்கொடுமையை செய்பவர்களை அரசாங்கம் தண்டிக்கவும் வேண்டுகிறோம்.

6. தமிழகத்தில் நான்கு இலட்சம் பேர் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 50 சதவீதம் பேர் கல்லூரி மாணவர்கள். தேவன் மனமிறங்கி இவர்களை விடுவித்து இரட்சிக்க மன்றாடுகிறோம்.

7. தமிழகத்தில் பால்வினை நோயால் பாதிக்கப்பட்டுள்ள 9 இலட்சம் பெண்கள், தங்களுக்காக இரத்தம் சிந்தின இயேசு கிறிஸ்துவிடம் திரும்பவும், குணமடையவும் வேண்டிக் கொள்கிறோம்!

8. தமிழகத்தில் ஆண்டிற்கு சுமார் 10,000 பேர் தற்கொலை செய்து மரிக்கின்றனர். இதில் 70 சதவீதம் பேர் 25 வயதுக்குட்பட்ட இளைஞர்கள். தற்கொலையின் ஆவியால் பாதிக்கப்பட்டவர்கள் விடுவிக்கப்பட ஜெபிக்கிறோம்.

9. தமிழகத்தில் ஒரு ஆண்டில் ஏறக்குறைய பதினோரு இலட்சத்து எழுபதாயிரம் பிள்ளைகள் பிறக்கின்றனர். இவர்கள் வளரும்போது கர்த்தரை அறிந்து ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்!

10. வேறுமொழி பேசும் சுமார் 15.49 சதவீத மக்கள் தமிழகத்தில் குடியேறியுள்ளனர். இவர்கள் யாவரும் கர்த்தரை அறிய, இரட்சிக்கப்பட மன்றாடுகிறோம்!

நாள் 33

தமிழகம் எதிர்நோக்கியுள்ள பிரச்சனைகளுக்காக ஜெபிப்போம்

1. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட 84.51 சதவீத மக்கள் தமிழகத்தில் வாழ்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவர் கையிலும் தமிழ் வேதாகமம் தவழ நாங்கள் ஜெபிக்கிறோம்!

2. இந்தியாவிலேயே அதிகளவு விபத்துகள் தமிழ்நாட்டில்தான் நடைபெறுகின்றன. சாலைவிதிகளை மதிக்க, பாதுகாக்கும் தெய்வம் இயேசுவிடம் வர வேண்டுகிறோம்!

3. ஜாதி வெறியினால் தமிழகத்தில் பெருகி வரும் கௌரவக் கொலைகள் முற்றிலும் மாற, ஜாதி வெறியிலிருந்து மக்கள் தேவனால் விடுவிக்கப்பட ஜெபிக்கிறோம்!

4. தமிழகத்தில் சுமார் 15,000 போலி மருத்துவ கிளினிக்குகள் இயங்குவதாக ஆய்வுகள் கூறுகின்றன. மக்களின் உயிரோடு விளையாடும் போலி மருத்துவர்கள் சட்டத்திற்கு முன் நிறுத்தப்பட ஜெபிக்கிறோம்!

5. தமிழகத்தில் இரண்டரை இலட்சத்திற்கும் மேற்பட்ட அரவாணிகள் உள்ளனர். இவர்கள் இரட்சிக்கப்பட, பாவவாழ்க்கையைவிட்டு நல்வழிக்குத் திரும்ப மன்றாடி ஜெபிக்கிறோம்!

6. தமிழகத்தில் விவாகரத்துக்கள் அதிகமாகி வருகின்றது. குடும்பங்கள் கர்த்தரை அறியவும், அன்பில் பெலப்படவும் வேண்டுகிறோம்!

7. தமிழகத்தில் பெருகிவரும் கொலை, கொள்ளைகள் போன்றவை காவல்துறை யால் முற்றிலும் அடக்கப்பட, தவறுசெய்பவர்கள் சட்டத்திற்கு முன் நிறுத்தப்பட ஜெபிக்கிறோம்!

8. தமிழகத்தில் படித்து முடித்து வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவுசெய்துள்ள 53 இலட்சம் பேருக்கும் மேற்பட்டவர்களுக்கு ஏற்ற வேலைவாய்ப்பை அரசாங்கம் ஏற்படுத்திக்கொடுக்க மன்றாடுகிறோம்!

9. தமிழகத்தில் பெருகிவரும் மூடப்பழக்க வழக்கங்கள் மாறவும், மக்கள் மெய்தேவனை அறிந்து, மனந்திரும்பி இரட்சிக்கப்படவும் வேண்டுகிறோம்!

10. தமிழகத்தில் சுமார் 30 சதவீதம் மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர். இவர்கள் சத்தியத்தை அறிந்து, செழிப்படைய ஜெபிக்கிறோம்!

நாள் 34

தமிழ்நாட்டில் ஒரு மாற்றம் உண்டாக ஜெபிப்போம்

1. தமிழகத்தின் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளில் 90 சதவீதம் பேர் இளைஞர்கள் ஆவார்கள். சிறைச்சாலை ஊழியத்தின்மூலம் இவர்கள் தொடப்பட்டு இரட்சிக்கப்பட ஜெபிக்கிறோம்!

2. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் ஜாதி சங்கங்களில் வளர்ச்சி அதிகமாக உள்ளது. ஜாதிவெறியிலிருந்து நம் மக்கள் விடுபட மன்றாடுகிறோம்.

3. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிகளவு ஜாதிக்கலவரங்கள் நடைபெறு கின்றன. ஜாதிச் சண்டைகள் முற்றிலும் மாறி சமாதானம் உண்டாக ஜெபிக்கிறோம்!

4. தமிழகத்தின் சில மாவட்டங்களில் இன்றளவும் காணப்படும் தீண்டாமைப் பழக்கம் முற்றிலும் மாற நாங்கள் மன்றாடி ஜெபிக்கிறோம்.

5. தமிழகத்தின் சில மாவட்டங்களில் இன்றும் நடைமுறையில் உள்ள பெண் குழந்தைகளைக் கொல்லும் கொடுமையான பழக்கம் முற்றிலும் ஒழிக்கப்பட நாங்கள் பாரத்துடன் ஜெபிக்கிறோம்.

6. இந்தியாவிலேயே தமிழகம்தான் ஊழலில் முதலிடத்தில் உள்ளது. ஊழல் இல்லாத ஒரு ஆட்சி உண்டாக வேண்டிக் கொள்கிறோம்.

7. இந்தியாவிலேயே தமிழகம்தான் எய்ட்ஸ் வியாதியில் முதலிடம் வகிக்கிறது. இக்கொடிய நோய் முற்றிலும் அகல மன்றாடுகிறோம்.

8. தமிழகத்திலிருந்த வெளிவரும் சுமார் 45 பத்திரிகைகளின் ஆசிரியர்கள் நேர்மையான மற்றும் மக்களுக்கு நன்மை உண்டாக்கும் செய்திகளையே வெளியிட ஜெபிக்கிறோம்.

9. தமிழகத்தில் சுமார் ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் பள்ளிக்குச் செல்லாமல், குழந்தைத் தொழிலாளர்களாக உள்ளனர். அரசாங்கம் இவர்களுக்குக் கட்டாயக் கல்வி வழங்க ஜெபிக்கிறோம்.

10. தமிழகத்தில் சுமார் 25,000 பேர் கொத்தடிமைகளாக வேலை செய்துகொண்டு வருகின்றனர். இவர்கள் யாவரும் மீட்கப்பட, அரசாங்கம் இவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்க வேண்டுகிறோம்.

நாள் 35

இந்திய தேசத்திற்காக தேவனைத் துதிப்போம்

1. இந்தியாவில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான முழுநேர ஊழியர்களை தேவன் எழுப்பி இருப்பதால் கர்த்தரை ஸ்தோத்தரிப்போம்!

2. இந்தியாவில் ஒவ்வொரு நாளும் சுமார் 6,000 பேர் இரட்சிக்கப்பட்டு சபைகளில் சேர்க்கப்படும் மக்களுக்காக தேவனை ஸ்தோத்தரிப்போம்.

3. இந்தியாவில் 5 கோடிக்கும் அதிகமான மக்களை தேவன் இரட்சித்திருப்பதால் நாம் கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம்.

4. இந்தியா முழுவதும் சுமார் 3,000 ஸ்தாபனங்கள் மூலமாக சுமார் 20,000 மாற்றுக் கலாச்சார ஊழியர்கள் கர்த்தருடைய ஊழியத்தை செய்துகொண்டு இருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

5. இந்தியாவில் வருடத்திற்கு சுமார் 50 இலட்சம் சுவிசேஷக் கைப்பிரதிகள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படுவதற்காக ஆண்டவரை ஸ்தோத்தரிப்போம்.

6. மனிதர்களைக் கொன்று சாப்பிடும் அநேக ஆதிவாசிகள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு மனம் மாறி தேவனுடைய பிள்ளைகளாக வாழ்வதற்காக கர்த்தரைத் துதிப்போம்.

7. இந்தியாவில் ஒவ்வொரு மாதமும் 200 ஆவிக்குரிய சபைகள் புதிதாக உருவாகி இரட்சிக்கப்படுகிறவர்கள் அநுதினமும் சபையில் சேர்க்கப்பட்டுக் கொண்டிருப்ப தற்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

8. தெற்காசிய நாடுகளிலேயே மிகப்பெரிய பொருளாதார வலிமைமிக்க நாடாக இந்தியா முன்னேறியிருப்பதால் கர்த்தரை மகிமைப்படுத்துவோம்.

9. இந்தியாவில் சுமார் 75% மக்கள் 35 வயதிற்கும் குறைவான இளைஞர்கள். நம் தேசம் ஒரு இளமையான தேசமாக இருப்பதால் தேவனைத் துதிப்போம்.

10. உலக அளவில் இந்தியா கல்வித்துறையில் இரண்டாவது இடத்திற்கு முன்னேறி இருப்பதற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம்.

நாள் 36

இந்தியாவில் நற்செய்தி தீவிரமாக அறிவிக்கப்பட ஜெபிப்போம்

1. கர்த்தாவே! உலகளவில் செயல்பட்டு வரும் மாற்றுக் கலாச்சார ஊழிய ஸ்தாபனங்களில் மூன்றில் ஒரு பங்கு இந்தியாவில் உள்ளன. இவைகள் யாவும் தீவிரமாக நற்செய்தி அறிவிக்க ஜெபிக்கிறோம்.

2. ஆண்டவரே! உலகளவில் நற்செய்தி அறிவிக்கப்படாத மக்களினங்களில் 25 சதவீதம் பேர் இந்தியாவில் உள்ளனர். இவர்களுக்கு நற்செய்தி அறிவிக்க ஊழியர்களை எழுப்பும்படி மன்றாடுகிறோம்.

3. தேவனே! இந்தியாவில் இயேசுவை அறியாத 3.5 லட்சம் கிராமங்கள் உள்ளன. இங்கு நற்செய்தி அறிவிக்க ஆத்தும பாரமுள்ளவர்களை எழுப்பும்படி வேண்டுகிறோம்.

4. ராஜாவே! இந்தியாவில் இன்னும் 40 கோடி பேருக்கு இயேசு அறிவிக்கப்பட வில்லை. ஒவ்வொரு விசுவாசியும் ஆத்தும பாரம் பெற்று ஒரு நபரை கர்த்தருக்குள் வழிநடத்த ஜெபிக்கிறோம்.

5. பிதாவே! இந்தியாவில் 30,000க்கும் அதிகமான மக்கள் கொண்ட 204 இன மக்கள் உள்ளனர். இவர்கள் மத்தியில் சுதேச ஊழியர்கள் உருவாகும்படி மன்றாடுகிறோம்.

6. இயேசுவே! இந்தியாவில் உள்ள 2600 இன மக்களிடையே ஒரு சபை கூட இல்லை. இங்கு சபைகளை நிறுவ ஊழியர்களை அனுப்பும்படி வேண்டுகிறோம்.

7. ஆவியானவரே! இந்தியாவில் உள்ள 28 ஆயிரம் பின்கோடுகளில் சுமார் 18 ஆயிரம் பின்கோடுகளில் ஒரு கிறிஸ்தவ ஊழியர் கூட இல்லை. இங்கு ஊழியம் செய்ய ஊழியர்களை எழுப்பும்படி ஜெபிக்கிறோம்.

8. பரிசுத்தரே! இந்தியாவில் மிக அதிகமான மக்கள் தொகை உள்ள பகுதி வடக்கு பீகார். ஆனால் இங்கு மிக குறைந்தளவே சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கு திரளான ஊழியர்கள் அனுப்பப்பட மன்றாடுகிறோம்.

9. தகப்பனே! இந்தியாவில் இரகசிய கிறிஸ்தவர்களாக உள்ள சுமார் 1 கோடி பேர் வெளிப்படையாக தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட அவர்களுக்கு நீர் தைரியம் தரும்படி வேண்டுகிறோம்.

10. தேற்றரவாளரே! இந்தியாவில் 1 இலட்சத்திற்கும் மேல் முழு நேர ஊழியர்கள் உள்ளனர். இவர்கள் ஒவ்வொருவருக்குள்ளும் ஆத்தும பாரமும், ஜெப ஆவியும் ஊற்றப்பட கதறி ஜெபிக்கிறோம்.

நாள் 37

நம் இந்திய தேசத்தின் இரட்சிப்புக்காக ஜெபிப்போம்

1. தேவனே! இந்தியாவில் உள்ள 30 மாநிலங்கள், 7 யூனியன் பிரதேசங்களில் நீர் ஒரு மாபெரும் எழுப்புதலைக் கட்டளையிட வேண்டுகிறோம்!

2. கர்த்தாவே! இந்தியாவின் 545 எம்.ப்பிக்களும், 4070 எம்.எல்.ஏக்களும் கர்த்தரே தேவன் என்று அறிய, இரட்சிக்கப்பட மன்றாடுகிறோம்!

3. ஆண்டவரே! இந்தியாவின் 4635 இனங்களைச் சேர்ந்த மக்களும் கர்த்தரை ஏற்றுக்கொண்டு பரலோகம் வர ஜெபிக்கிறோம்!

4. இயேசுவே! எங்கள் தேசத்தில் பேசப்படுகிற 1652 மொழிகளிலும் வேதம் மொழிபெயர்க்கப்பட கிருபை தருவீராக!

5. தேவனே! இந்தியாவின் 3949 நகரங்களிலும், 350 மாவட்டங்களிலும் சபைகள் ஸ்தாபிக்கப்பட, தேவன் அற்புதங்கள், அடையாளங்கள் மூலமாக தம்மை வெளிப்படுத்த வேண்டுகிறோம்!

6. கர்த்தாவே! இந்தியாவில் 7 இலட்சம் கிராமங்களிலும் சுவிசேஷம் அறிவிக்க ஊழியர்களை திரளாக தேவன் எழுப்ப, சபைகள் இல்லாத 18,000 பின்கோடுகளிலும் சபைகள் துவங்கப்பட மன்றாடுகிறோம்!

7. பிதாவே! இந்தியாவிலுள்ள 1,23,500 சபைகளும், 3 லட்சம் ஊழியர்களும் தீவிரமாய் சுவிசேஷம் அறிவிக்க ஜெபிக்கிறோம்!

8. ஆண்டவரே! இந்திய தேசத்தில் உள்ள 5.50 கோடி கல்லூரி மாணவர்களும் கிறிஸ்துவின் சீஷர்களாய் மாற

9. ஆவியானவரே! எங்கள் தேசத்தில் வன்முறை, தீவிரவாதங்கள் நீங்கி மாபெரும் சமாதானம் உண்டாக வேண்டுகிறோம்!

10. இயேசுவே! இந்திய தேசத்தில் உள்ள பணவீக்கம், பொருளாதார நெருக்கடி, வறுமைகள், வேலையில்லா திண்டாட்டம் நீங்கி செழிப்பு உண்டாக மன்றாடுகிறோம்!

நாள் 38

இந்தியாவின் ஆவிக்குரிய தேவைகளுக்காக மன்றாடுவோம்

1. இந்தியாவில் ஒவ்வொரு நிமிடத்திற்கும் 35 குழந்தைகள் வீதம் ஒரு நாளைக்கு 50,000 குழந்தைகள் பிறக்கின்றன. தேவனே! இந்தக் குழந்தைகளை உமக்காகக் கிருபையாய் தெரிந்துகொள்ள ஜெபிக்கிறோம்.

2. இந்தியாவில் 80% இந்துக்களும், 14% முஸ்லீம்களும், 4% மற்ற மதத்தினரும், 2.4%கிறிஸ்தவர்களும் உள்ளனர். கர்த்தரை அறியாத ஒவ்வொருவருக்கும் நற்செய்தி அறிவிக்கப்பட, இம்மக்கள் யாவரும் இரட்சிக்கப்பட மன்றாடுகிறோம்.

3. மலைப்பகுதிகளில் வசிக்கும் பழங்குடியின மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க அநேக மிஷனரிகள் எழும்பவும், இவர்கள் மத்தியில் கர்த்தர் ஒரு பெரிய எழுப்புதலை அனுப்பவும் வேண்டுகிறோம்.

4. இந்தியாவில் இன்னும் 1400 மொழிகளில் வேதம் மொழிபெயர்க்கப்படவில்லை. வேதத்தை பிறமொழிகளில் மொழிபெயர்க்கும் மிஷனரிகளை எழும்ப, இந்த ஊழியத்திற்கான பணத்தேவைகள் சந்திக்கப்பட ஜெபிக்கிறோம்.

5. இந்தியாவிலுள்ள 28,000 பின்கோடுகளில், 18,000 பின்கோடுகளில் ஒரு கிறிஸ்தவ ஊழியர்கூட இல்லை. கர்த்தர் இப்பகுதிகளுக்கு ஊழியர்களை திரளாய் அனுப்பும்படி மன்றாடி மன்றாடுகிறோம்.

6. இந்தியாவில் சுமார் 3.5 இலட்சம் கிராமங்களில் இயேசு கிறிஸ்துவைக் குறித்து இன்னும் ஒருமுறைகூட அறிவிக்கப்படவில்லை. இப்பகுதிகளில் சுவிசேஷம் தீவிரமாய் அறிவிக்கப்பட பாரத்தோடு வேண்டுகிறோம்.

7. இந்தியாவில் இன்னும் 40 கோடி பேருக்கு சுவிசேஷம் போய்ச்சேரவில்லை. அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்ப மன்றாடி ஜெபிக்கிறோம்.

8. அதிகமான மக்கள் தொகை கொண்ட, ஆனால் குறைந்த அளவே சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ள வடக்கு பீகாரின் இரட்சிப்புக்காக மன்றாடுகிறோம்.

9. இந்தியாவின் இப்போதைய மக்கள் தொகை சுமார் 138 கோடி. இவர்களில் ஒருவரும் கெட்டுப்போகாமல் இரட்சிக்கப்பட வேண்டுகிறோம்.

10. சுவிசேஷத்தை எதிர்த்து நிற்கும் தீவிரவாத இயக்கங்கள், மதவாத இயக்கங்களில் உள்ள சகோதர சகோதரிகள் மனம்மாறி இரட்சிக்கப்பட ஜெபிக்கிறோம்.

நாள் 39

இந்திய மக்களின் தேவைகளுக்காக ஜெபிப்போம்

1. இந்தியாவில் கோபத்தின் ஆவியினால் 7 விநாடிக்கு ஒரு கொலை அல்லது ஒரு தற்கொலை அல்லது ஒரு விவாகரத்து நடைபெறுகிறது. கர்த்தாவே! கோபத்தின் ஆவி எங்கள் தேசத்தைவிட்டு அகல ஜெபிக்கிறோம்.

2. இந்தியாவில் பல்வேறு தேசங்களைச் சேர்ந்த 6 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் அகதிகளாக உள்ளனர். இவர்கள் ஆண்டவருடைய அன்பை அறிந்து பரலோக குடிமக்களாக மாற மன்றாடுகிறோம்.

3. இந்தியாவில் இளம் தாய்மார்களின் இறப்பு எண்ணிக்கை கூடிக்கொண்டு வருகிறது. பிரசவ நேரத்தில் இவர்கள் தேவனை நோக்கிக் கூப்பிட, கர்த்தர் இவர்கள் மேல் மனம் இரங்க வேண்டுகிறோம்.

4. சுமார் 7,000 க்கும் மேற்பட்ட இந்தியர்கள் வெளிநாட்டு சிறைகளில் வாடுகின்றனர். இவர்கள் இரட்சிக்கப்பட, விடுதலை பெற ஜெபிக்கிறோம்.

5. இந்தியாவில் சாலை வசதிகளே இல்லாத 2.5 இலட்சம் கிராமங்களுக்கு அரசாங்கம் உடனடியாக சாலை வசதிகளை ஏற்படுத்தித்தர மன்றாடுகிறோம்.

6. இந்தியாவில் மின்வசதி இல்லாமல் இருளில் உள்ள 57% கிராமப்புற மக்களுக்கு அரசாங்கம் மின்வசதிகளை படுத்திக்கொடுக்க, இவர்கள் வாழ்வில் ஒளியாகிய கிறிஸ்து பிரகாசிக்க வேண்டுகிறோம்.

7. இந்தியாவில் வீடுகள் இல்லாமல் இருக்கும் 1.3 கோடி மக்களுக்கு தேவன் வீடுகளை ஏற்படுத்திக் கொடுக்க ஜெபிக்கிறோம்.

8. இந்தியாவில் சுத்தமான குடிநீர் கிடைக்காமல் பல்வேறு வியாதிகளால் வேதனைப் படும் 14 கோடி மக்களுக்கு அரசாங்கம் குடிநீர் வசதி ஏற்படுத்திக்கொடுக்க, இம்மக்கள் ஜீவதண்ணீராம் ஆண்டவரை அறிந்துகொள்ள மன்றாடுகிறோம்.

9. இந்தியாவில் சுகாதாரமற்ற சூழலில் வசித்துவரும் 14 கோடி மக்கள் மற்றும் மருத்துவ வசதி பெறமுடியாத நிலையிலுள்ள 26 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பரம வைத்தியராம் இயேசுவிடம் வரும்படி வேண்டுகிறோம்.

10. இந்தியாவில் பயன்படுத்தப்படாமல் கடலில் கலந்து வீணாகும் 95% மழைநீரை தேக்கி மக்களுக்கு வழங்க அரசாங்கம் நல்ல திட்டங்களைத் தீட்ட ஜெபிக்கிறோம்.

நாள் 40

இந்தியாவை எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சனைகளுக்காக ஜெபிப்போம்

1. தேவன் அருவருக்கும் விக்கிரக ஆராதனை இந்திய தேசத்தில் முற்றிலும் அகன்றுபோக ஜெபிக்கிறோம்.

2. இந்திய தேசத்தில் விபச்சார தொழிலில் தள்ளப்பட்டுள்ள இருபது இலட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் மீட்கப்படவும், அரசாங்கம் அவர்களுக்கு மறுவாழ்வு தர நடவடிக்கை எடுக்கவும் மன்றாடுகிறோம்.

3. மனிதனை தெய்வமாக வழிபடும் குரு வணக்கத்திலிருந்து இந்திய தேசமக்கள் விடுபட, மெய்யான தேவன் இயேசுவிடம் திரும்ப வேண்டிக் கொள்கிறோம்.

4. இந்தியாவில் தலைவிரித்தாடும் ஊழல் மற்றும் லஞ்சங்களில் ஏழைகள் பலவிதங்களில் பாதிக்கப்படுகின்றனர். நேர்மையான அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் தேசத்தில் எழும்ப ஜெபிக்கிறோம்.

5. இந்தியாவில் 7 கோடியே 50 லட்சம் பேர் மதுவுக்கு அடிமையாக உள்ளனர். கர்த்தருடைய சுவிசேஷத்தினால் இவர்கள் விடுதலையாக்கப்பட மன்றாடுகிறோம்.

6. தொலைதொடர்பு சாதனங்களாகிய செய்தித்தாள், தொலைகாட்சி, இணைய தளங்கள் யாவும் நேர்மையாக செயல்பட வேண்டுகிறோம்.

7. இந்தியாவில் தீவிரவாதங்களால் 640 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. தீவிரவாதிகள் மனந்திரும்ப, பாதுகாப்புப் பணியில் இருக்கும் ராணுவ வீரர்கள், மற்றும் போலீஸ்காரர்கள் பாதுகாக்கப்பட ஜெபிக்கிறோம்.

8. தேசத்தில் மதவாத இயக்கங்களால் பெருகிவரும் கலவரங்கள் முற்றிலும் அகலவும், தேசத்தில் சமாதானம் பெருகவும் மன்றாடுகிறோம்.

9. இந்தியாவில் பெருகிவரும் மந்திரவாதங்கள், பில்லிசூனியங்கள், நரபலிபோன்ற பழக்கவழக்கங்கள் முற்றிலும் ஒழிய வேண்டுகிறோம்.

10. இந்தியாவில் பெருகிவரும் சுவிசேஷ எதிர்ப்பு இயங்கங்களின் தலைவர்கள் இரட்சிக்கப்பட, தேவன் சுவிசேஷத்திற்கு ஒரு திறந்த வாசலைக் கட்டளையிட ஜெபிக்கிறோம்.

குறிப்புகள்